# ஈழமுழக்கம்

6

செப்டம்பர்
அக்டோபர்
1983

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.______




1983.

# ஈழ விடுதலையில் ஒரு புதிய அத்தியாயம்

வரலாறு எப்பொழுதும் முன்னோக்கியே பாய்கிறது. அது மனித குல விடுதலையை மிக அண்மைக்குக் கொண்டு வருகிறது. ஈழத்தில் நடைபெற்ற-சிறையைஉடைத்து புரட்சியாளர்களை மீட்டெடுத்ததானது ஒரு புதிய வரலாற்று அத்தியாயத்தை தொடங்கி வைத்துள்ளது.

1771-ல் பரிஸ் நகரத்தில் நிகழ்ந்த முதல் சிறையுடைப்பும், அதைத்தொடர்ந்து கியூபா, ரஸ்யா, அயர்லாந்து ஆகிய நாடுகளில் நிகழ்ந்த சிறையுடைப்புகளும், அந்தந்த நாடுகளின் ஆளும் வர்க்கங்களை கிலி பிடிக்கவும், ஆட்டங்காணவும், செய்தது மட்டுமல்ல, புரட்சியின் அகநிலை சக்திகளைப் பலப்படுத்தவும் செய்தது. அவ்வாறே ஈழத்தில் நடைபெற்ற இந்த சிறையுடைப்பும் ஈழ மக்கள் விடுதலைப் புரட்சியின் அகநிலை சக்தியை பலப்படுத்தியுள்ளது. அடக்கி ஒடுக்கப் பட்டிருந்த தமிழ் தேசிய இன மக்களின் புரட்சிகர வரலாற்றை உலக வரலாற்றின் அத்தியாயத்தில் பொறித்துள்ளது.

ஈழ மக்களின் விடுதலைக்கான போராட்டம், தொடக்கத்தில் அகிம்சை சத்தியா கிரகம் என்ற வடிவத்திலும், 1975-க்குப் பிறகு அது தனிநபர் பயங்கரவாதம் என்ற வடிவிலும் நிகழ்ந்துள்ளது. ஆனால் இந்த சிறையுடைப்பு நிகழ்ச்சியானது ஈழ விடுதலைப் போராட்டத்திலான கொரில்லா யுத்தத்தின் பங்கை அரசியல் ரீதியாக வெளிப்படுத்தும் சம்பவமாக அமைந்துள்ளது.

''மறைந்திருந்து தாக்கு; பின் ஓடு'' ''தனிநபர்களை அடித்து வீழ்த்து; பிறகு மறைந்து கொள்ளு'' என்ற வடிவத்தில் மட்டுமே நிகழ்ந்த ராணுவ நடவடிக்கைகள் விடுதலை புரட்சிக்கான அரசியலை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு சரியான கொரில்லா யுத்த முறையாக இப்போது தொடங்கியுள்ளது.

ஆகஸ்டில் இலங்கையின் தேசிய வெறிபிடித்த சிங்கள பூர்ஷ்வா அரசு தன் ராணுவ வெறியாட்டத்தை சிறையில் அடைபட்டிருந்த புரட்சியாளர்கள் மீது செலுத்தியது. 54 விடுதலை வீரர்கள் கண்கள் பறிக்கப்பட்டும், மிகக் கொடூரமான முறையில் வெட்டி கொலை செய்யப்பட்டும் உள்ளனர். இந்த நிகழ்ச்சி ஈழ விடுதலைக்கு போராடும் மக்களை அகநிலையில் பெரிதும் பாதித்தது. ''இனி சிறை சென்றால்

27-ம் பக்கம் பார்க்க......

# "புதிய திருப்பம்"

ஈழ விடுதலைப் போராட்டம் ஓர் புதிய திருப்பத்துள் காலடி வைத்திருக்கும் இந்நேரத்தில் ஈழ மக்கள் விடுதலை முன்னணியும் மிக சரியான கோரிக்கைகளை முன்வைத்துள்ளதானது, ஒருசில விடுதலை இயக்கங்களாவது சரியான திசைவழியில் செல்கின்றது என்பதை துலாம்பரமாக எடுத்துக் காட்டுவதாக உள்ளது. ஈழ மாணவர் பொது மன்றம், ஈழ இளைஞர் முன்னணி, ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி, கிராமியத் தொழிலாளர்கள், விவசாயிகள் முன்னணி, கடற் தொழிலாளர்கள் முன்னணி, ஆகியன ஒன்றிணைந்து ஈழ மக்கள் புரட்சிகர தலைமையின் வழிகாட்டலின் கீழ் விடுதலை முன்னணியை ஸ்தாபித்திருந்தன. இவர்கள் ஏற்கனவே பரந்தன் தொழிலாளர் போராட்டம், யாழ் கூட்டுறவுச் சங்கப் போராட்டம், தாழ்த்தப்பட்ட மக்களின் பல போராட்டங்கள் ஆகியவற்றை முன்னெடுத்து அதில் வெற்றி அடைந்தது மாத்திரமல்லாமல் ஜே. ஆரின் பதவி நீடிப்புக்கு எதிரான பிரச்சாரங்களில் ஈடுபட்டு சிறை சென்றும் வந்துள்ளார்கள்.

துப்பாக்கி எடுத்தால்தான் விடுதலை இயக்கமாக இருக்க முடியும் என்ற ஈழத்தின் சரித்திரத்தை மாற்றி, மக்களை அரசியல் ரீதியாக வளர்த்து அதன் மூலம் தமது அமைப்பைப் பலப்படுத்தி வருபவர்கள். தத்துவார்த்த தெளிவற்றவர்களின் கையில் இருக்கும் ஆயுதம் பல இயக்கத் தோழர்களையே அழித்து வரும் இந்நேரத்தில் ஆயுதம் ஏந்துவோர் தன் எதிரி யார், நண்பன் யார் என்பதில் தெளிவாக இருப்பது அவசியம் என்பதை வலியுறுத்தியவர்கள். ஏனெனில், முதலில் எதிரி யார் நண்பன் யாரென்று கண்டுகொள்ளாத வரை ஏந்தும் ஆயுதம் எந்த நேரமும் எமது மக்களுக்கு எதிராகவும் பிரயோகிக்கப்படலாம். இவற்றை எல்லாம் உணர்ந்து மக்களை தத்துவார்த்த ரீதியாகத் தட்டி எழுப்பியவர்கள் மக்கள் புரட்சியே சோசலிச ஈழத்துக்கான வழியென்று உறுதியாகக் கூறி செயல் படுகின்றார்கள். இவர்களுக்கு வழிகாட்டும் ஈழ மக்கள் புரட்சிகர தலைமை, ஈழத்தின் அரசியல் சமூக, பொருளாதார பண்பாடு, மற்றும் உலக நாடுகளில் நடந்த, நடைபெற்றுக் கொண்டு இருக்கின்ற மக்கள் விடுதலைப் போராட்டங்களின் அனுபவங்களையும் எடுத்து ஈழ தேசத்தின் விடுதலைக்கு ஏற்ற அமைப்பு யுத்த தந்திரங்களுடைய மக்கள் விடுதலைப் படையை ஆரம்பித்துள்ளார்கள்.

ஈழ மக்கள் விடுதலை முன்னணி அடிமட்ட மக்கள் மத்தியில் வேலை செய்து வருவது பாராட்டத் தக்கது. விடுதலையின்

முதுகெலும்பாய்த் திகழ்வது மக்கள் சக்தியே. அந்த மக்கள் சக்தியை வெறும் துப்பாக்கியைக் காட்டி வென்றெடுக்க முடியாது. தொடர்ச்சியான பிரச்சாரத்தின் மூலமே இது சாத்தியம். இந்நிலையில் ஈழ மக்கள் விடுதலை முன்னணியின் பங்களிப்பு மகத்தானது மாத்திரமல்ல ஒரு நம்பிக்கையையும், உத்வேகத்தையும் போராளிகளுக்கும் மக்களுக்கும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

இலங்கையில் இருக்கக் கூடிய சகல தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கும், தன்னாட்சி கொண்ட ஓர் சுய நிர்ணயமுள்ள ஈழ தேசமே பரிகாரம் என்று பிரகடனப் படுத்தும் இவர்கள், சகல தமிழ் பேசும் மக்களை ஒன்றிணைப்பதற்காக வன்னி, திருமலை, மட்டு நகர், மலையகம் முதலிய பாகங்களிலும் தமது வேலையை விஸ்தரித்து செய்வதானது யாழ் குடா நாட்டிற்குள் இயங்கும் இயக்கங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டும், முன்னுதாரணமும் ஆகும். மலையக தமிழர்மத்தியில் ஓர் தொழிற் சங்கத்தை நிறுவி அதனூடாகவும் தமது வேலைகளை முடுக்கி விட்டுள்ளார்கள். அதேபோல் இஸ்லாமியத் தமிழர் மத்தியில் இவர்களது வேலைகள் மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருவதானது தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கு ஓர் விடிவுகாலம் நெருங்கி வருவதைக் காட்டுவதாக உள்ளது. ஒரு குறிக்கப்பட்ட எண்ணிக்கை கொண்ட இளைஞர் குழுக்களால் அல்ல ஒட்டு மொத்தமான மக்களை அணிதிரட்டுவதன் மூலமே ஒரு நாட்டின் விடுதலையோ, அன்றி ஒரு தேசிய இனத்தின் விடுதலையோ சாத்தியமானது. இவற்றை நன்குக உணர்ந்து கொண்டு இவர்கள் செயற்படுவது மிகவும் பாராட்டத் தக்கது. பாராளுமன்ற ஜனநாயக வாதிகளால் முதலாளித்துவ ஜனநாயகத்தின் மிச்சசொச்ச உரிமைகளையே காப்பாற்ற முடியாத இந்த காலகட்டத்தில், பாராளுமன்ற ஜனநாயகத்தாலோ, அன்றி வெறும் பயங்கரவாதத்தாலோ அல்லது ஹீரோயிசத்தில் நம்பிக்கைகொண்ட சில குழுக்களாலோ விடுதலையைப் பெற்றுவிட முடியாது. இந்நிலையில் இவற்றிற்கு மாற்று சக்தியாக ஈழ மக்கள் விடுதலை முன்னணி மிக வேகமாக வளர்ந்து வருகின்றது. சிலர் சில கொரில்லா தாக்குதல்களுக்கு ஊடாக ஈழத்தை பிடித்து விடலாம் என்று அலைந்து கொண்டு, ஈழ விடுதலைக்கான வேறெந்தத் தயாரிப்பிலும் ஈடுபடாமல் இருக்கும் இவ்வேளையில் ஈழ மக்கள் விடுதலை முன்னணி தமிழ் பேசும் மக்களுக்கு விட்ட அழைப்பானது, ஈழ விடுதலை வரலாற்றில் புதியது மாத்திரமல்ல அவசியமானதும், அவசரமானதுமாகும். சிங்களப் பகுதிகளில் முதலீடு செய்த பல தமிழ் பேசும் மக்கள்

ஒவ்வொரு கலவரத்திலும் தமது சொத்துக்களை இழந்து ஓட்டாண்டி களாகவே ஈழத்துக்கு வருகிறார்கள். ஆனால் சிறிது காலத்தில் மீண்டும் சிறீலங்காவிற்கே திரும்பச் சென்று தமது வியாபாரங்களைத் தொடங்குகிறார்கள். இதற்கு பல காரணங்கள் உண்டு. ஒன்று சிறீலங்கா அரசு தமிழ் பிரதேசங்களில் பாரிய தொழிற்சாலைகள் அமைப்பதற்கு உதவ விரும்பாமை, இரண்டாவது சரியான தொழில் நுட்பங்கள் கிடையாமை போன்ற பல காரணங்களைக் கூறலாம். ஆனால் இந்நிலைமையை நீடிக்கவிட முடியாது. ஈழ தேசத்தின் விடுதலைக்குப் போராடும் அதே வேளை, ஈழ தேசப் பொருளாதாரம் கட்டி அமைக்கப்பட சகல ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும். இந்நிலையில் ஈழ தேசத்து பொருட்களும், உற்பத்திகளும் முன்னுரிமை அளிப்பதன் மூலமே நாம் இதை நிறைவேற்ற முடியும். இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டுதான் தமிழ்பேசும் மக்கள் தமது சகல முதலீடுகளையும் ஈழப் பிரதேசத்தில் செய்யுமாறும், அவற்றுக்கு ஆதரவாகவும் இவற்றை வளர்த்தெடுப்பதற்காகவும் சகல தமிழ்பேசும் மக்களும் ஈழ பிரதேச உற்பத்திகளுக்கு முன்னுரிமை அளிப்பதுடன், இவற்றை ஒழுங்கு முறையாகக் கொண்டு நடத்தவும், தேவையான தகவல்களைத் திரட்டிக் கொடுக்கவும், சகல துறைகளைச் சார்ந்த புத்தி ஜீவிகளையும் ஓரணியில் திரளுமாறும் கோரியுள்ளனர். ஈழ மக்கள் விடுதலை முன்னணியின் இக்கோரிக்கையானது இன்றைய சூழ்நிலையில் மிகவும் முக்கியமானதொன்றாகும். இதனை வெறும் கோரிக்கையாக விட்டு விடாமல் இதை நடைமுறைப்படுத்த சகல முயற்சிகளையும் ஈழமக்கள் விடுதலை முன்னணி மேற்கொள்ளும் என்று எதிர் பார்க்கின்றோம். இத் திட்டங்கள் நினைத்தவுடன் செயல் படக்கூடியதல்ல. தமிழ் பேசும் மக்கள் அனைவரின் அயராத ஒத்துழைப்பிலேயே இதன் வெற்றியும் தோல்வியும் தங்கியுள்ளது. பிரத்தியேகமாக வெளிநாட்டில் இருக்கும் ஈழத் தமிழர்கள், ஈழ தேச பொருளாதாரத்தை கட்டி அமைக்கும் பணியில் செயல்பட நிறைய வாய்ப்புகள் உண்டு. இதை அவர்கள் செவ்வனே நிறைவேற்று வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். ஈழ மக்கள் விடுதலை முன்னணி மக்கள் புரட்சிக்கு- போராட்டத்துக்கு வழி வகுக்கும் என்பது மாத்திர மல்ல, சோசலிச ஈழத்திற்கும் இவர்களே திறவுகோளாக இருப்பார்கள்.

-ஆசிரியர்

# ஈழ விடுதலை இயக்கங்களும் மலையகத் தமிழரும்

ஈழ விடுதலைக்காக இன்று பல விடுதலை இயக்கங்கள் போராடி வருகின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணியானது பாராளுமன்ற ஜனநாயகத்தின் மூலமும், அகிம்சைப் போராட்டம் மூலமும் இதனைச் சாதித்து விடலாம் எனக் கூறுகின்றது. ஆனால் விடுதலை இயக்கங்கள் எல்லாமே ஆயுதப் போராட்டமே ஒரே வழி என பறைசாற்றுகின்றன. ஆயுதப் போராட்டத்தில் எல்லா இயக்கங்களும் நம்பிக்கை வைத்திருந்த போதிலும், போராட்ட தந்திரங்களிலும், கொள்கைகள் கோட்பாடுகளிலும், இவை பல வித்தியாசங்களைக் கொண்டுள்ளன. ஈழ விடுதலைக்காக இன்று இலங்கையில் 7 அமைப்புகள் போராடி வருகின்றன. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப் புரட்சி அமைப்பு, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி, தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ விடுதலை இராணுவம் ஆகியவையே இவ்வமைப்புகளுமாகும். இந்த அமைப்புகளுக்கும் மலையகத் தமிழ் மக்களுக்கும் உள்ள தொடர்பை ஆராயுமுன், இம் மலையக மக்களைப் பற்றிச் சிறிது ஆராய்வது இன்னும் சிறப்பாக இருக்கும்.

1820-ம் ஆண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் கோப்பி, தேயிலைத் தோட்டங்களுக்கு கூலிகளாக அழைத்துச் செல்லப்பட்ட தென்னிந்தியத் தமிழர்களே இம் மலையக மக்களாவார். இவர்கள் இலங்கையின் மத்திய பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் ஐந்து தலைமுறைகளாக வேலை செய்து வருகின்றனர். காடாய்க் கிடந்த மலைப் பிரதேசங்களை செல்வம் கொழிக்கும் பூமியாக மாற்றியவர்கள் இத்தமிழர்களே. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் தந்திரத்தால் இத் தமிழ் மக்கள் ஏனைய தமிழ்பேசும் மக்களுடன் எவ்விதத்திலும் தொடர்பு கொள்ள முடியாமல் இருந்தாலும், பின்னர் தமிழ் பேசும் மக்களின் தலைவர்களென்று சொல்லக் கூடியவர்களும், முதலாளித்துவ சிந்தனையால் அதாவது தாமே தொடர்ந்து தலைவர்களாக இருக்க வேண்டும் என்ற காரணத்தாலும், இவர்களைப் பிரித்தே வைத்தார்கள்.

இவை தவிர வடக்கு கிழக்கு மாகாணத்தில் இல்லையேல் பாரம்பரியப் பிரதேசங்களில் வாழக்கூடிய தமிழ் பேசும் மக்களும் இவர்களும், பொருளாதார ரீதியாகவும் வேறு பல வழிகளிலும் மாறுபட்டே காணப்படுகின்றனர். மொத்தத்தில் இத்தமிழ்பேசும் மக்களுக்கும் ஏனைய தமிழ் பேசும் மக்களுக்கும் தொடர்பில்லையென்பது மாத்திரமல்லாமல் சில முரண்பாடுகளும் உண்டென்பதை நாம் கவனத்திலெடுக்க வேண்டும். உண்மையிலேயே இம்முரண்பாடுகளுக்கு காரணம் முதலாளித்துவத்தின் பிரித்தாளும் தந்திரமாய் இருந்தாலும், உள்நாட்டு தமிழ் முதலாளிகளும் இவர்களை ஓரளவு சுரண்டியே வாழ்ந்துள்ளார்கள். அதிலும் பிரத்தியேகமாக மலையகத்தில் யாழ்ப்பாணத்

தமிழ் முதலாளிகள், இல்லையேல் குட்டி முதலாளிகள், இம் மலையக தமிழரைச் சுரண்டி உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சிங்கள முதலாளிகள், இந்திய முதலாளிகளும்கூட இவர்களைச் சுரண்டிக் கொழுத்திருந்தாலும், "இவர்கள் இந்தியர்கள்" "சாதியில் குறைந்தவர்கள்" போன்ற எண்ணங்கள் வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு இருந்ததால், இவர்களுக்கு இடையில் உள்ள முரண்பாடு ஓரளவு வளர்ச்சியடைந்து வந்தது. பின்னர் ஜீ.ஜீ பொன்னம்பலம் இவர்களது வாக்குரிமை, குடியுரிமை ஆகியவற்றை பறிக்க (1943) ஆதரவாய் இருந்ததால் இவர்களது முரண்பாடு மேலும் வளர்ச்சி அடைந்தது. மலையக மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசோ, அன்றி வடக்கு கிழக்கு மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறும் தமிழர் கூட்டணியோ இம் மக்களை ஒன்றுபடுத்தி இவர்களது உரிமைகளை வென்றெடுக்க முனையவில்லை. தமிழரசுக் கட்சி மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகம் என்ற ஒரு தொழிற் சங்கத்தை ஆரம்பித்திருந்தாலும் இன்று அது இருக்கும் இடமே இல்லாமல் போய்விட்டது.

இம்மக்களுக்கிடையில் முரண்பாடுகள் இவ்வாறு இருந்தாலும் வடக்கு, கிழக்கு, மலையகம் என்ற எந்தவித பேதமின்றி தமிழ் பேசும் மக்கள் சிங்களப் பெருந் தேசியவாதத்தால் அடக்கப்படுகிறார்கள் என்பது வெட்டவெளிச்சமான உண்மை. ஆனால், அண்ணன் அமிர்தலிங்கமோ அன்றி சௌமிய மூர்த்தி தொண்டமானோ இந்த இரு தமிழ் பேசும் மக்களையும் இணைத்து அவர்களது உரிமைகளை வென்றெடுக்க முனையவில்லை. மாறாக மலையக மக்களுக்கும் தனி ஈழ நாடுகளுக்கும் சம்பந்தமில்லை என்று தொண்டமான் கூற, அதற்கு ஆமாம் போட்டுக்கொண்டே அமிர் உள்ளார்.

இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வாக தனி ஈழமே அமையமுடியும் என்று கர்ஜித்து 1977 தேர்தலில்வென்ற அண்ணன் அமிர், ஈழப் போராட்டத்தைத்தான் முன்னெடுக்காவிடினும் மலையக, வடக்கு கிழக்கு மக்களையாவது ஒன்றிணைக்க முயற்சித்தாரா என்றால் அதுவும் இல்லை. பாராளுமன்ற அரசியல் வாதிகள், இல்லையேல் அரசியலையே பிழைப்பாக நடாத்தும் இவர்கள் இப்படியான விடயங்களில் கூடுதல் அக்கறை செலுத்த மாட்டார்கள் என்பது உண்மையே.

ஆனால் அதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலையா இவ் விடுதலை இயக்கங்களும் பின்பற்றப் போகின்றன? ஏறத்தாழ 12 லட்சம் மலையகத் தமிழரை ஒதுக்கி வைத்து விட்டா ஈழம் கேட்கின்றோம்? அப்படியாயின் யாருக்கு ஈழம்? இல்லையேல் ஏன் ஈழம்? உலகத்தில் தமிழனுக்கு என்று ஒரு நாடில்லை என்பதற்காக நாடு கேட்கின்றோமா? இல்லையேல் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் சுதந்திரமாக வாழ நாடு கேட்கின்றோமா? இவற்றைப்பற்றி இவ் விடுதலை இயக்கங்கள் ஏதாவது திட்டங்கள் வைத்துள்ளதா? இவையெல்லாம் இன்று எம்முன் பூதாகரமாக எழுந்திருக்கும் கேள்விகளே. விடுதலை இயக்கங்கள் இப்பிரச்னையில் என்ன முடிவெடுத்திருக்கின்றன என்பதை பார்க்குமுன், மேலுள்ள கேள்வி

களுக்கு விடைகாணவேண்டியது முக்கியமாகும்.

இலங்கையில் ஏறத்தாழ 38 லட்சம் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ருர்கள். இவர்களில் ஏறத்தாழ 12 லட்சம் பேர் மலையகத் தமிழ் மக்களாவார். இலங்கையில் உள்ள ஏனைய தமிழ் பேசும் மக்களை விட சிங்கள எதேச்சதிகார அரசாங்கங்களால் மிகவும் மோசமாக அடக்கப்படுபவர்கள் இந்த மக்களே. வாக்குரிமை, குடியுரிமை அற்றே இவர்கள் 35 வருடங்களாக வாழ்க்கை நடாத்துகின்ருர்கள் என்று சொல்லும் போது வேறு ஏதாவது உரிமைகள் இவர்களுக்கு உண்டா என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இலங்கையில் இருக்கக்கூடிய சகல தமிழ்பேசும் மக்களும் அடக்கப் படுகின்ருர்கள் ஒடுக்கப்படுகின்ருர்கள். சகல உரிமைகளும் மறுக்கப்பட்டு அடிமைகளாக பஞ்சைகள், பராரிகளாக வாழ்கின்ருர்கள். எமது உரிமைகளை வென்றெடுக்க பல போராட்டங்களை நடாத்தி, எதற்கும் சிங்கள இனவாத முதலாளித்துவ அரசுகள் இணங்கி வராததால்தானே நாம் இன்று தனி நாடு கேட்கின்ருேம். அப்படி இருக்கும்பொழுது எமது மொழி பேசுகின்ற, எமது கலை,கலாச்சாரம், பண்பாடுகளைக் கொண்ட, ஒரே தீவிலேயே வாழக் கூடிய அடக்கி ஒடுக்கப்படும் ஒரு கூட்டம் மக்களைப் பற்றிச்சிந்தியாமல் இல்லையேல்அவர்களையும் இணைத்துக் கொள்ளாமல் ஓர் விடுதலைப் போராட்டம் நடக்க முடியுமா?அப்படியாயின் யாருக்கு அந்த விடுதலை? அடக்கப்படும் தேசிய இனத்திற்குள் உள்ள முதலாளிகளுக்கா? இவற்றை நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். ஐந்து தலைமுறைகளுக்கு முன்னர் அதாவது ஒன்றரை நூற்ருண்டு முன்னர் வந்தவர்கள் இந்தியர்களாய் இருந்தால், 2000 வருடங்களுக்குமுன் இந்தியாவில்இருந்து வந்தவர்கள் என்று சரித்திரம் கூறுகிறதே அந்தச் சிங்களவரும் இந்தியர்தானே. அதேபோல் 2000 ஆண்டுகளுக்கோ இல்லை அதற்கு முன்னரோ வந்த பூர்வீகத் தமிழரும் இந்தியர்தானே. எனவே ஈழ விடுதலை என்பது இலங்கையில் இருக்கக்கூடிய சகல தமிழ் பேசும் மக்களையும் உள்ளடக்கியதாய் இருக்க வேண்டும். இல்லையேல் ஆயுதப் போராட்டமாய் இருந்தாலும் விடுதலை என்பது பகற்கனவாகவே இருக்கும்.

இவ்வகையில் சிந்தித்து ஈழ விடுதலை இயக்கங்கள் ஏதாவது செயல்படுகின்றனவா? ஆம் ஒரு சில இயக்கங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப் புரட்சி அமைப்பு ஆகியன மேற்கண்ட கொள்கைகளில் மிகவும் உறுதியாய் இருப்பது அடக்கப்பட்ட மக்களுக்கு ஒரு ஆறுதலாய் இருக்கும் என்று நம்புகிறேன். இதிலும் பிரத்தியேகமாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது மலையகத்தில் தொழிற்சங்கம், மாணவர் அமைப்பு போன்றவற்றை நிறுவி மக்களை அணிதிரட்டி வருவதைக் காணக்கூடியதாய் உள்ளது. இன்று இலங்கையில் இருந்து ஈழ விடுதலைக்காகப் போராடக்கூடிய சகல அமைப்புகளும் மாக்சீயத்தையோ அல்லது சோசலிசத்தையோ தமது சித்தாந்தம் என்று பிரச்சாரம் செய்தாலும், நடை

(15ம் பக்கம் பார்க்க)

# தமிழின எதிர்ப்பில் சிங்கள ஏடுகள்

டி. எஸ். ராஜு
(ஆசிரியர், மக்கள் மறுவாழ்வு)

இலங்கையைப் பற்றியதவருன செய்திகள் வெளி நாட்டுப் பத்திரிகைகளில்-குறிப்பாக இந்தியப் பத்திரிகைகளில் வெளி வருகின்றன. தொடர்ந்து இப்படி வருமானல் இலங்கையில் இருக்கும் இந்தியப் பத்திரிகை நிருபர்கள் பொறுப்பேற்க வேண்டிவரும் என்று ஸ்ரீலங்கா அரசும்-அதன் குறிப்பிட்ட சில மந்திரிகளும் அலறத் தொடங்கி இருக்கிருர்கள்.

இப்படித் தொடர்ந்து தவருன செய்திகள், தகவல்களைத் தந்து இலங்கைக்கு கெட்டப் பெயரை உண்டாக்குகிருர்கள். இதைத் தடுக்கவும் இது மாதிரியான பிரச்சாரங்களை முறியடிக்கவும்வெளிநாடுகளில் விளம்பர நிலையங்களையும்—தகவல் தொடர்பு அலுவலகங்களையும் அமைக்க ஸ்ரீலங்காஅரசு திட்டமிட்டுள்ளது.

இலங்கையைப் பற்றி 'இல்லாததை பொல்லாததை'யெல்லாம் வெளிநாட்டு ஏடுகள் எழுதிவிட்ட மாதிரி துடிக்கும் ஸ்ரீலங்கா அரசு -அதன் மந்திரிகள் தமது நாட்டின் தேசியப் பத்திரிகைகள் விடயத்தில் எவ்வாறு நடந்து கொள்கின்றன?மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன்குடம் என்போமே அதுபோன்ற மனப்பான்மையைத்தான் காட்டி வருகின்றன.

தேசிய பத்திரிகைகள் சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்களுக்கு எதிரான இனவெறியையும் பேதத்தையும் தூண்டிவிடும் வகையிலேயே செய்திகளையும், தகவல்களையும் தந்து வருகின்றன. சிங்கள ஏடுகள் மட்டுமல்ல, சில ஆங்கில ஏடுகள்கூட இதை செய்து வருகின்றன. செய்தித் தணிக்கை அமுலில் இருக்கும் காலங்களில்கூட இம்மாதிரியான பிரச்சாரங்களை செய்யத் தவறவில்லை. இதையெல்லாம் அரசு கண்டுக்கொள்ளவில்லை-இதையிட்டு கவலையும் படவில்லை-அவற்றின் தமிழர் எதிர்ப்பு பிரச்சாரத்திற்குத் துணையாகவே நிற்கிறது. இதிலே பத்திரிகைத் தணிக்கை சட்டம், ஒழுங்கு பற்றியெல்லாம் கவலைப்படவில்லை.

இலங்கையில் தமிழர்-சிங்களவர் பேதம் வளர்வதற்கும்—தொடர்ந்து இனக் கலவரங்கள், இனப் படுகொலைகள் ஏற்படுவதற்கும், சிங்கள பேரினவாதம் பூதாகரமாக வளர்ந்து நிற்பதற்கும் தகவல் தொடர்புகளாக இருக்கின்ற பத்திரிகைகள் எந்த அளவிற்கு பங்கு வகித்தன- வகிக்கின்றன என்று சொன்னுல்-அரசு சார்பான பத்திரிகைகளின்பங்கே அதிகம் என்று சொல்லலாம். அந்த அளவிற்கு நாட்கள் தவருது தமிழர்களுக்கு எதிரான துவேசத்தை கட்ட

விழ்த்து விட்டன; தமிழர்களுக்கு எதிரான செய்திகளை, தகவல்களை 'நான் முந்தியா நீ முந்தியா' என்றளவில் போட்டிப் போட்டுக் கொண்டு தேசிய ஏடுகளான சிங்கள ஏடுகள் வெளியிட்டு வருகின்றன.

சிங்கள மொழியில் பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. இவற்றுள் தினமின, தவச, லங்காதீப்ப ஆகியவை முன்னணி வகிக்கும் தினசரிகள், இவற்றின் ஞாயிறுவெளியீடுகள் சிலுமினரிவிரச, சிறீலங்காதீப்ப ஆகியவையாகும். பத்திரிகையின் மாலை வெளியீடு ஜனதா என்ற ஏடாகும். 'தவச' வின் மாலை ஏடு 'சவச' என்ற ஏடாகும். இவை தவிர்த்து கட்சி சார்பான தினசரிகளும் வெளியிடப்படுகின்றன. எத்த (கம்யூனிஸ்ட் கட்சி), ஜனதின (சமசமாஜக் கட்சி), ஜனஹித்த (சிறிலங்கா சுதந்திரக் கட்சி), சியரட்ட (யூ. என். பி.) முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

இவை எவையும் தமிழர்களுக்கு எதிரான பிரச்சாரத்தை விட்டு வைக்கவில்லை; தமிழர்களுக்கு எதிராக மட்டுமல்ல; தமிழர்களுக்கு ஆதரவாக இருக்கும் (சிங்கள) கட்சிகள், தலைவர்களையும் விட்டு வைக்கவில்லை-ஆட்சியில் இருப்போர் தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குகிறார்கள்; நாட்டை விற்கப் போகிறார்கள்; சிங்களவர்களுக்கு துரோகம் செய்கிறார்கள் என்பதுபோன்றெல்லாம் பிரச்சாரங்கள் செய்யத் தவறுவதில்லை.

இன்றைக்கு ஈழப்பிரிவினை கேட்பதால்தான் தமிழ் மக்கள்மீது சிங்கள மக்கள் கோபம் கொண்டிருக்கிறார்கள்; தாக்குகிறார்கள்; கொலை செய்கிறார்கள் சொத்துகளை சூறையாடுகிறார்கள் என்று சிலர் சொல்கிறார்கள்; பிரச்சாரமும் செய்கிறார்கள்.

ஆனால் இது உண்மையல்ல; பிரிவினை கோரிக்கைக்கு முன்னும் இது மாதிரி தாக்குதல் நடந்தன; இன வெறி பிரச்சாரமும் செய்யப்பட்டது.

சிங்களப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை அவை அந்நாளிலிருந்தே திட்டமிட்ட பிரச்சாரங்களை செய்து வந்திருக்கின்றன. அந்தந்த காலகட்டத்திற்கு தகுந்தபடி தமிழர் விரோத பிரச்சாரங்களை செய்து வந்திருக்கின்றன.

60—70க் கிடையில் 'கள்ளத் தோணி' 'கள்ளக் குடியேற்றம்' என்றெல்லாம் கட்டுக் கதைகளை கட்டவிழ்த்து விட்டன. கள்ளத் தோணிகளாக இந்தியாவிலிருந்து பெருந்தொகையான தமிழர்கள் இலங்கை வருகிறார்கள். வடகிழக்கு மலையகம் பகுதிகளில் அவர்களுக்கான கள்ளக்குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன என்றெல்லாம் எழுத ஆரம்பித்தன.

## நிராகரியுங்கள்

ஈழப் பாட்டாளிகளே, விவசாயிகளே, மாணவர்களே, இளைஞர்களே, பெண்களே, முதலாளித்துவம், இனவெறி இவற்றால் வாடும் புத்திஜீவிகளே, புரட்சிகர சக்திகளே, சமத்துவ ஈழத்துக்கான புரட்சியில் ஐக்கியப்படுங்கள். காட்டிக் கொடுக்கும், அராஜகவாதத் தலைமைகளை இனங்கண்டு நிராகரியுங்கள்.

60 வாக்கில் (இலங்கை) திராவிட முன்னேற்றக்கழகம் (இளஞ்செழியன் கழகம்) அட்டனில் மாநில மாநாட்டை நடந்தேறியது. அந்த மாநாட்டிற்கு தமிழரசு கட்சித் தலைவர்களான எஸ். ஜே. வி. செல்வநாயகம், திருச்செல்வம், அமிர்தலிங்கம் போன்றவர்களை அழைத்தது. இதுதான் மலையகத்திற்கு பூர்வீகத் தமிழர்கள் அழைக்கப்பட்ட முதல் கட்டம்— மேற்படி கழகத்தை பொறுத்தவரை வட கிழக்கு, மலையகம் இணைய வேண்டும்; தமிழர்கள் என்ற அளவில் பேதங்களை மறக்க வேண்டுமென்ற கொள்கையாக இருந்தது.

இதையும் சிங்கள ஏடுகள்— வித்தியாசமாக—இன ரீதியாக வேற்றுமைகளை தோற்றுவிக்கும் வகையிலேயே எழுதின.

61, 62 வாக்கில் இக்கழகம் பண்டாரவளையில் நாடற்றவர் மறுப்பு மகாநாட்டை நடத்தியது- இது மலையக மக்கள் குடியுரிமை பறிப்பதை எதிர்த்து நடத்தப்பட்ட ஒரே மாநாடு இதுதான். மாநாடு முடிந்ததும் மாநாட்டிற்கு வந்திருந்த தமிழர்களை—தோட்டத் தொழிலாளர்களையெல்லாம் காடயர்கள் தாக்கினார்கள். அப்போது வெளிமடை எம். பி. ராஜரட்ன (அப்போது இன வெறியைத் தூண்டிப் பேசுவதில் முதன்மையாக இருந்தவர்)இதை முன்னின்று நடத்தினர்.

இந்த மாநாட்டையும் சிங்கள ஏடுகள் மோசமாக எழுதின.

பலன்,அக்கழகம் அதன் வெளியீடான தி.மு.க.என்ற பத்திரிகை தடை செய்யப்பட்டன.

அதைத் தொடர்ந்து தமிழகத்திலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இங்குள்ள கழகம்— தமிழரசு கட்சி ஆகியவற்றுக்கும் இரகசியத் தொடர்புகளுண்டு; இலங்கையை கைப்பற்ற சதித் திட்டம் போடுகின்றன; அதற்கு மலை நாட்டுக்காடுகளில் போர் பயிற்சி அளிக்கப்படுகிறது; கைக்குண்டு போன்ற போர்க்கருவிகளை தயாரிக்கின்றன என்று எழுதின; அது மட்டுமல்ல, இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை குறிக்க (அப்பிதெமழு) நாம் தமிழர் இயக்கம் என்றே எழுதும். அடைப்புக்குள் இ.தி.மு. கழகம் என்று எழுதும்.

அந்த கால கட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தவச, சவச, சன் (ஆங்கில ஏடு) ஆகியவை இந்த பிரச்சாரத்தில் முன்னணி வகித்தன-நாள் தவறாது இது மாதிரி செய்திகளை தயாரித்து வெளியிட்டன; ஆசிரிய தலையங்கங்களும் தீட்டின. அன்றைய இனவாதம் கக்கிவந்த ராஜரத்ன, ஆர். ஜி. சேனநாயகா போன்றோரின் பேச்சுக்களுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்து சிங்களவர் மத்தியில் இன வெறியையூட்டின.

இன்றைய செய்தி நாளைய வரலாறு என்பதுபோன்ற ஒரு லட்சிய நோக்கம் எதுவும் அவ்வேடுகளிடம் இருக்கவில்லை;அவற்றின் ஒரே நோக்கம் சிங்களவர் உள்ளத்தில் எப்படியெல்லாம் தமிழர் எதிர்ப்பு உணர்வை தூண்டி விடலாம்; அதன் மூலம் தமது பத்திரிகை விற்பனையைப் பெருக்கலாம் என்பதுதான்.

எப்பொழுதுமே அவை இன வெறியையும்— இனக் கலவரங்களையும் தூண்டி விட்டமைக்கு எத்தனையோ செய்திகளுண்டு. 81,ஜூன் மாதம் 4ம் தேதி யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் தேர்தல் நடந்தது. அதுவும் அவசர கால கட்டத்தின் கீழ் நடந்தது. இதற்கிடையில் மே 31-முதல் ஜூன் 4ந்தேதி வரை பல வன் செயல்கள் இடம் பெற்றன; இவற்றை போலீசாரே முன்னின்று நடத்தினர்; இது குறித்து பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட.து உண்மையில்யாழ்ப்பாணத்தில் நடந்தது என்ன? பாராளுமன்றம் விவாதித்த விவரங்கள் என்ன என்பதை மக்கள் அறிய வேண்டும்; குறிப்பாக பெரும்பான்மை இனத்தவர்கள் அறிய வேண்டும்.

பாராளுமன்றத்தில் இன வெறியைத் தூண்டுகிறூர்போல பேசப்பட்ட சிங்கள எம்.பிக்களின் பேச்சுக்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்தன. 'த. ஐ. வி. கூ.வை எதிர்ப்பவர்கள் மரணத்தைத்தான் சந்திக்க வேண்டும்— காமினி திசா நாயக்க, 'த. ஐ. வி. கூயும் விடுதலைப் புலிகளும் வெவ்வேறு அல்ல என்பதை என்னுல் நிரூபிக்க முடியும்'— சிறில் மத்யூ' என்றெல்லாம் முதல்பக்க கொட்டை எழுத்துச் செய்திகளாக வெளியிட்டன. 'போலீசார் சுடப்படவில்லை என்று நாங்கள் சொல்லவில்லை' என்று அமிர்தலிங்கம் சொன்ன செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தது.

இதுமட்டுமா? ஒரு சிங்கள இளைஞர் 150 மணிநேரம் விடாது பேசி ஏற்படுத்திய சாதனையை 'லங்கா தீப்ப,' 'சிங்கள பௌத்த இளைஞன் உலக சாதனையை முறியடித்தான்' என்று தலைப்புச் வெளியிட்டது.

80-81 க்குமேல் 31-ந்தேதி யாழ்பாணத்தில் நடந்த த.வி.கூ. கூட்டத்தில் ஒரு தமிழ் போலீசார் சுடப்பட்டார். அவருக்கு நான்கு சிங்கள போலீசார் ரத்தம் கொடுத்தனர். அந்த செய்தியை லங்கா தீப்ப எப்படி வெளியிட்டது? 'கனகசுந்தரத்திற்குதந்தது சிங்கள ரத்தமே' என்று.

'சிங்ஹலே' என்ருல் சிங்களவன். சிங்ஹ-லே என்று கொஞ்சம் வித்தியாசமாக எழுதினுல் சிங்கத்தினுடைய ரத்தம் என்று பொருள். (அவர்கள் சிங்கத்தின் ரத்தத்திலிருந்து வந்தவர்கள் என்று கருத்து உண்டு) எப்படி இன வெறியை கிளறும் விதம்?

வட கிழக்கு மாகாணங்களிலிருந்து பலர் வெளி நாடுகளுக்கு வேலைத்தேடிச் செல்கிருர்கள். இவர்களையும் இந்த ஏடுகள் விட்டு வைப்பதாக இல்லை. எங்கெங்கே சென்று எவ்வளவு பேர்தொழில் செய்கிருர்கள் என்பதையும் அவை குறிப்பிடத் தவறவில்லை.

---

## முதலாளித்துவ குணம்சம்

புரட்சி அலைகள் எழும்போது பேச்சுவார்த்தை, ஒப்பந்தம், வாக்குறுதி இவைகளை வீசுவது தொழிலாளித்துவத்தின் முக்கிய குணம்சங்களில் ஒன்று. இதன் மூலம் புரட்சி திசைதிருப்பப்படுவதுடன், முதலாளித்துவத்தின் வர்க்க நலன்களும் பாதுகாக்கப்படுகின்றன.

---

## உங்கள் பங்கு

உலகத் தொழிலாளர்களே! ஒடுக்கப்பட்ட தேசத்தவரே!

தேசிய விடுதலை, சமுதாய முன்னேற்றம், ஜனநாயகம், சோசலிசம், சமாதானம் ஆகிய வற்றுக்காக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நடாத்தும் உயரிய போராட்டத்திற்கு ஊக்க மிக்க உங்கள் பங்களிப்பைச் செலுத்துங்கள்.

---

'தவச' பத்திரிகை, ''மேற்கு ஜெர்மனி சென்று குடியேறும் இந்த இளைஞர்களுக்கு எங்கிருந்து பணம் கிடைக்கிறது?'' என்று ஒருமுறை எழுதியிருந்தது. 'வடக்கே கொள்ளையிலும் கொலை குற்றங்களிலும் சம்பந்தப்பட்டவர்கள் பெர்லினுக்குப் போய்விட்டார்கள் (தினமின), என்று வேலை வாய்ப்பு தேடி வெளிநாடு செல்கிறவர்களைப் பற்றி அவை எழுத வில்லை. 'ஈழத் தமிழர்களே வெளி நாட்டு வேலைகளை பிடித்துக் கொள்கிறார்கள். ஏஜெண்டுகளிடம் செல்லும் சிங்களவனுக்கு பூஜ்யம்தான் (லங்கா தீப்ப)'-இப்படியும் செய்திகள் வெளியிடுகின்றன.

செய்திகள், தலையங்கம் எழுதுவது மட்டுமல்ல; கருத்துப் படங்களை இம்மாதிரி இன வெறியைத் தூண்டும் வகையில் வெளிவருகின்றன.

'பிரிவினை வாதம் பேசும் கட்சிகளை தடைசெய்யும் வகையில் அரசியல் சாசனத்தை திருத்த வேண்டும்' என்று பாராளுமன்றத்தில் பருத்தித்துறை எம்.பி.பேசிய கருத்துக்கு 'லங்கா தீப்ப' அமிர்தலிங்கம் அவர்களது வாயுக்கு பூட்டு போட்டது போன்ற கருத்துப்படம் வரைந்திருந்தது.

இந்தப் பத்திரிகைகள் நாட்டில் அமைதியும், ஒழுங்கும் நிலவ வேண்டுமென்று பேசாமலுமில்லை. அடிக்கடி இது குறித்து தலையங்கம் தீட்டும். ஆனால் அவற்றில் கூட நாட்டில் அமைதியின்மைக்கும் வன்முறை ஏற்படுவதற்கும் த.வி.கூ. யும், தமிழ் தீவிரவாதிகளும்தான் காரணம் என்று எழுதும். அப்போதெல்லாம் ஈழம் கோரிக்கை தடைசெய்யப்பட வேண்டும்; தீவிர வாதிகள் ஒழிக்கப்படவேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசுக்கு உபதேசம் செய்யத் தவறுவதில்லை. அதுமட்டுமல்ல, நாட்டின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் ஈழ பிரிவினைக்காரர்களையும், தீவிரவாதிகளையும் ஒழிக்க பௌத்த குருக்கள் வழி காட்டவேண்டும் என்றும் எழுதத் தவறவில்லை.

உதாரணத்திற்கு சில வரிகள் பின்வருமாறு:

''ஈழம் ஆதரவு கட்சிகளை தடைசெய்யும் வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று 'மகா சங்கம்' ஜனாதிபதியைக் கேட்டுள்ளது; அதுபோன்ற வேண்டுகோளை அதுபோன்ற அமைப்பான 'சிங்கள மகாஜன வரமுன'யும் கோரியுள்ளது (லங்கா தீப்ப')''

''பெரும்பான்மையினத்தினருடன் சிறுபான்மையினர் அனைவரும் சேர்ந்து அமைதியுடன் பணிசெய்ய ஒரே ஒரு இனம் மட்டும் அந்த பாதையிலிருந்து விலகிப்போகிறது. இது அந்த இனத்திற்கு மட்டுமல்ல; நாட்டிற்கே சங்கடங்களை கொண்டுவந்து சேர்க்கும் என்பதில் ஐயமில்லை (லங்கா தீப்ப)''



Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

இவ்வாறு சிங்கள ஏடுகள் ஈழ எதிர்ப்பு-தமிழர் எதிர்ப்பு கொள்கையை கடைபிடித்து வருகின்றன; சிங்கள-பௌத்தம் என்பதே அவற்றின்கோஷமாக இருக்கிறது. இவை சிங்களம்-பௌத்தம் பற்றி பேசும்போது தம்மை ஆரியர் என்பதை நினைவில் கொண்டிருக்கின்றன என்பதற்கு தமிழர் குறித்து பயன்படுத்தும் சொற் பிரயோகத்தை குறிப்பிட வேண்டும். தமிழ்இனத்தை தமிழ் கட்சிகளை சுட்டும்போது, ''திராவிட'' என்ற சொல்லையே பயன்படுத்துகின்றன. தமிழினத்தை இழிவாக எழுத வேண்டுமென்ருல் தெமழு'' என்று எழுதும்.

இப்படி எழுதும் இந்த ஏடுகள் சிங்கள மக்களையும் இனவெறியையும் யூட்டி தட்டி எழுப்பின.

'அன்றுபோல இன்றும் நமது மதம் இனம் ஆகியவற்றை காப்பாற்ற வேண்டியுள்ளது,' 'சிங்கள இனம் ஆபத்தான நிலையில் இருக்கிறது,' 'பிரிந்து நிற்கும் சிங்களவர்களை ஒன்று சேர்க்க முயல்வோம்,'— இவையெல்லாம் கொட்டை எழுத்துக்களில் பிரசுரமானவை; அதுமட்டுமல்ல; கொட்டிக்காவத்தை தேரோ என்ற பௌத்த அடிகள் பேசியதாக வந்த தலைப்புச் செய்தி, ''இராணுவம் செய்கிறதோ,'' இல்லையோ புத்த பிக்குகளாகிய ராணுவம்தான் நாட்டை காப்பாற்ற வேண்டியிருக்கிறது'' என்பதாகும்.

செய்தித் தணிக்கை என்ற ஒன்று இருக்கும் வேளையிலும்கூட இதுமாதிரி செய்திகள் வெளிவராமல் இருக்கவில்லை. அப்படி வராமல் தடுக்கப்பட்டிருக்குமானல் 83 ஆகஸ்ட் கலவரம் தோன்றியிருக்காது.

செய்தித் தணிக்கை கடுமையாக அமுலில் இருந்தும், யாழ்ப்பாணத்தில் 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட செய்தி பத்திரிகைகளில்—குறிப்பாக சிங்கள ஏடுகிளில் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கப்பட்டன. அதுமட்டுமல்ல; அப்படி கொல்லப்பட்ட வீரர்கள் அனைவரும் சிங்களவர்கள்தான் என்று குறிப்பிட்டு—பெயர்களும் பிரசுரிக்கப்பட்டன. இதன் எதிரொலிதான் கொந்தளிப்புக்கு மிக முக்கிய காரணம் என்று கருதுகின்றனர். இது குறித்து இலங்கை பொதுவுடமை கட்சி எம். பி. சரத் முட்டட்டுகம பாராளுமன்றத்தில் கடுமையாக விமர்சித்தார்.

வடக்கில் சிங்களவர்களை தமிழர்கள் தாக்குவதாக அடிக்கடி செய்திகள் வெளியிடுகின்றனர். அவை செய்திகள் வெளியிடத் தக்க வகையில் காமினி திசாநாயக்கா, சிறிமெத்யூ போன்ற சிங்கள இனத் தலைவர் பேசிவருகிருர்கள் இந்தியப்படைவந்தால்

---

### யுத்த தந்திரம்

யுத்த தந்திரம் ஒரு காலகட்டம் முழுவதிர்க்குமாக வகுக்கப்படுவது. இக்காலகட்டத்தில் வர்க்கப் போராட்டத்தில் வெற்றி காண்பதே அதன் குறிக்கோள். நடைமுறைத் தந்திரம் இயக்கத்தில் அவ்வப்பொழுது நிலவும் நிலமைக்கேற்ப- இயக்கம் உச்சத்தில் செல்கின்றதா அல்லது தொய்வு காண்கின்றதா என்பதைக்கொண்டும், இயக்கத்தின் உத்வேகத்தின் தன்மை, போராட்ட வடிவங்கள், ஸ்தலப் பிரச்சனைகள் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டும் - வகுக்கப்படுவது.

---

வருவதற்குமுன் இலங்கையில் இரத்த ஆறு ஓடும், 'ஒரு தமிழனைக்கூட வாழ விடமாட்டோம் என்பது போன்ற அவர்களின் பேச்சுக்களை தலைப்புச் செய்தியாக வெளியிடுகின்றன.

இதுவரை காலமும் தமிழ் துவேஷத்தை மட்டும் காட்டி வந்த சிங்கள ஏடுகள் இப்போது இந்திய துவேஷத்தையும் பரப்ப ஆரம்பித்துள்ளன.

'எந்த விசாரணையும், அனுமதியுமின்றி பிணங்களை அப்புறப்படுத்தலாம்' என்ற ஸ்ரீலங்கா அரசின் சட்டம் குறித்து இந்திய அரசு கவலை தெரிவித்தபோது அது இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாகும் என கண்டித்து எழுதத் தொடங்கின; இலங்கைத் தமிழர் பிரச்சனைகுறித்து இந்தியா எடுத்துள்ள நல்லெண்ண முயற்சியையும் விமர்சித்து எழுதத் தொடங்கியுள்ளன.

சிங்கள ஏடுகள் சிங்களவர்-தமிழர் ஒற்றுமைக்கு எந்தளவிற்கு உதவி இருக்கின்றன; எந்தளவுக்கு சிங்களர் மத்தியில் தமிழர்கள் பற்றி தவறான அபிப்ராயங்களை ஏவிவிட்டிருக்கின்றன; இனத்துவேஷமான இன வெறியையும்—கலவரத்தையும் தூண்டக்கூடிய செய்திகளையும் தலையங்கங்களையும் வெளியிட்டிருக்கின்றன என்பதைப் பற்றி 'தகவல் தொடர்பு மூலம் இனங்களுக்கான ஒற்றுமைக்கான குழு' 'பத்திரிகைகளும் 1981 இனக்கலவரமும்' என்ற தலைப்பில் ஒரு பிரசுரத்தை வெளியிட்டுள்ளது.

அதில் சிங்களமொழி ஏடுகள் பற்றி ஆராய்ந்தபோது எந்தளவிற்கு அவை தமிழ் மக்களுக்கெதிரான இனத் துவேசத்தையும் வெறியையும் வளர்த்துள்ளன என்பதை கண்டறிந்தது.

தென்னிலங்கையிலும்- மலையகப் பகுதிகளிலும் தமிழர்கள் சிங்களவர்களால் தாக்கப்படுவதற்கு, இப்பத்திரிகை சிங்கள மக்கள் மத்தியில் தவறான செய்திகளை, இன வெறியைத் தூண்டும் தகவல்களை, தலையங்கங்களை வழங்கியதே காரணம். சிங்கள மக்களை கிளப்பிவிட்டு, தமிழர்களை தாக்கச் செய்தலில்-இனிஎன்றுமே அந்தப் பகுதிகளில் தமிழர்கள் வாழ முடியாது என்ற அளவிற்கு இனத்துக்கிடையிலான விரிசலைஏற்படுத்தியதில் பத்திரிகைகளின் பங்கே அதிகம் என்பது தெளிவான உண்மை.

---

## நாம் வெல்லப்பட முடியாதவர்கள்

நாங்கள் வாழ்வின் வரத்திற்காக, அதன் சௌந்தர்யமான எழிலுக்காக போராடுகின்றோம். யாரை எதிர்த்துப்போராடுகின்றோம்?

உலக மானிட சமுத்திரத்தில், அசுத்தங்களை, குருதிகளை தம் கறைபடிந்த கரங்களால் பரப்பிவரும் அயோக்கியர்கள், மனிதர்களை வேட்டையாடும் மிருகத் தன்மை கொண்டவர்களுக்கு எதிராக. ஆம்! எமது எதிரிகளிடம் மிருக வேட்டைக்காரனின் உணர்ச்சிகள் உள்ளன. ஆனால் என்னிடமோ, வசந்தமான தென்றல்போன்ற இருளைக் கிழிக்கும் உதய சூரியன் போன்ற தத்துவமும், நீதியான இலட்சியமும், அதற்கேற்ற இமயம் போன்ற உறுதியும் உள்ளது. எம்மை பணத்தாலோ, சொத்தாலோ வாங்கிவிட முடியாது. ஏனெனில் உருக்குப்போன்ற தத்துவத்தால் வளர்த்தெடுக்கப்பட்டவர்கள்.

—ஈழ மக்கள் விடுதலை முன்னணி கூட்டத்தில் தோழர் ரமேஷ்

---

# ஈழக் காற்று

கரங்களுக்கு விலங்கிட்டு
சிறையில் பூட்டி;
கடுமைமிகு நஞ்சினை நீர்
எமக்கு ஊட்டி— தூக்கு
மரங்களிலே ஏற்றி எமை
வதை செய்தாலும்
தோட்டாவால் உயிருக்கே
உலை வைத்தாலும்- புதிய
காட்டாறு வேகத்தில்
போகும் எங்கள்
கால்களது பயணத்தை
தடுக்க ஏலா!
பாடுகின்ற உங்களது
எதிர்புரட்சி—பாட்டுக்கு
ஒருபோதும் பணிய மாட்டோம்—இங்கு
ஆடுகின்ற உங்களது
காலை முறிக்க
ஆயுதங்கள் உருவாக்கும்
பட்டறையை—துவக்கு
சூடுகளால் அழித்துவிட
நினைக்கும் உங்கள்
தொல்லைக்கஞ்சோம்
தொடர்ந்து செல்வோம்—விரைந்து
ஓடுகின்ற காட்டாறு
ஓரிடத்தில் தங்கிவிடும்
நீர்த்தேக்கமாகா—நீங்கள்
போடுகின்ற கூச்சல்களால்
நிற்காது போகும் வழி!
இறுதி வரை
போயே தீரும்!
விடுதலைக்கு வேட்கைகொண்ட—தமிழ்
மக்கள் உள்ளம்
வீறுகொண்டு
பொங்கி எழும் காட்டு வெள்ளம்!

விடுதலைக்கு செவ்விரத்தம்
சிந்தும் தோழர்
வீரமுடன் சாடி வரும்
ஈழக் காற்று!
விடுதலைக்குப் போராடும்
புரட்சி இயக்கம்
வேகமுடன் வளர்ந்து வரும்
புதிய சக்தி!

-வண்ணச்சிறகு

---

6-ம் பக்கத் தொடர்ச்சி......

முறையில் இவற்றின் தொழிற்பாட்டுக்கும் இவர்களின் சித்தாந்தத்துக்கும் எவ்வித தொடர்பும் இருப்பதில்லை. இதில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப் புரட்சி அமைப்பு, தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி போன்றவை ஆரம்பத்தில் இருந்தே ஒரு சரியானபாதையை வகுத்துக் கொண்டதால் இவர்கள்தான் இன்று பாட்டாளி, தொழிலாளி, விவசாயி மக்களைப் பற்றிச் சிந்திக்கின்றூர்கள். எல்லோரும் சோசலிசம் பேசுகிறுர்களே என்பதற்காக தமக்காக சோசலிசம் பேச பேச்சாளரை அமர்த்திக்கொண்ட விடுதலை இயக்கங்களுக்கு மத்தியில் ஒன்றிரண்டு இயக்கமாவது அடிமட்ட மக்களைப் பற்றிச் சிந்தித்து அவர்களை அணிதிரட்டுவதானது ஈழ விடுதலையில் ஓர் புதிய நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊட்டுகின்றது.

7 லட்சம் மக்களுடன் நான் இந்தியா வர உள்ளேன் என்று தொண்டமான் சொல்லும் பொழுதாவது இலங்கையில் உள்ள தமிழ்ப் பேசும் மக்களை இந்தியாவுக்கு கூட்டிச் செல்ல உனக்கு என்ன யோக்கியதை இருக்கின்றது என்று கேட்கக்கூட வக்கில்லாமல் சில விடுதலை இயக்கங்கள் இருக்கின்றன என்னும்பொழுது உண்மையில் இவை விடுதலை இயக்கங்கள்தானு என்ற சந்தேகம் எழுகின்றது. ஆனுல் இவர்களும்கூட மாக்சீயம்தான் பேசுகின்றனர்.

அதுமாத்திரமல்லாமல், இங்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கொள்கையில்சில வரிகளைக் குறிப்பிடுவது நன்று என்று நம்புகின்றேம். ''அமையப் போகும் ஈழம் இலங்கையில் இருக்கக் கூடிய சகல தமிழ்ப் பேசும் மக்களையும் உள்ளடக்கியதாய் இருக்கும். அத்துடன் இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்ட தமிழ் மக்கள் விரும்பும் பட்சத்தில் அவர்களும் ஈழப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்'' என்று கூறும் அவர்கள் தொடர்ந்து தமது அறைகூவலில் ஈழ தேசத்தை தட்டி எழுப்ப சகல தமிழ்ப்பேசும் மக்களையும் ஒன்றிணையும்படியும் கோரியுள்ளனர். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஏனைய அமைப்புகளுக்கு ஓர் முன் மாதிரியாய் தொடர்ந்து செயல்படுகிறது.

# காக்கையும் குயிலும்

-'தேனூரன்'-

அந்தக் காக்கை தன் கூட்டை நோக்கிப் பறந்து சென்றது—இறக்கையை அடிப்பதில் பர பரப்பு; மனதில் பதைபதைப்பு—

கூட்டை விட்டு வந்து ரொம்ப நேரமாகிவிட்டது; 'குஞ்சுகள் எப்படி இருக்கிறதோ என்னவா வது நேர்ந்திருக்குமோ?' என்கிற கவலை அதற்கு.

கூட்டை அடைந்துவிட்டது. குஞ்சுகளுக்கு மகிழ்ச்சி. இன்னும் அவை கத்த பழகவில்லை. கீச்கீச் சென்று குரலெழுப்பி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தன—

'அம்மா வயித்துக்கு ஏதாவது கொண்டு வந்திருப்பாள்.'

அத்தனையும் செக்கச் சிவந்த தங்கள் சின்னஞ்சிறு வாயைத் திறந்தன. காக்கைதான்கொண்டு வந்த இரையை கொஞ்சம் கொஞ் சமாக அவற்றின் பிளந்து திறந் திருந்த வாய்க்குள் புகட்டியது—குஞ்சுகள் எல்லாமே தன் குஞ்சு கள். அந்த பொன் குஞ்சுகளுக்கு சரிக்குச் சமமாக பகிர்ந்தளிப்பதில் தான் அதற்கு எத்துணை கவனம்; அத்தனை உயர்வானது அதன் பாசம்.

நாட்கள் நகர்கின்றன.

இனி தன் குஞ்சுகள் கத்த ஆரம்பித்து விடும்; பறக்கத் தொடங்கிவிடும்.

அந்த பெரிய மரத்தில்- வல் லூறுகளுக்குத்தெரியாத அடர்ந்த கிளையில் கூட்டைக்கட்டி முட்டை யிட்டு குஞ்சு பொரித்து...அதன் உழைப்பு!

காக்கைக்குப் பெருமை பிடிபட வில்லை.

அன்றைக்கு வெளியே பறந்து சென்று இரையுடன் திரும்பு கிறது.

கூட்டிலிருந்து அதன் குஞ்சு களின் குரல் கேட்கிறது.

'கா...கா...' என்ற மழலைக் குரல்கள்.

'அதென்ன வித்தியாசமான குரல்?'

காக்கைக்கு திகைப்பு. மீண் டும் காதைத் தீட்டிக் கேட்கிறது. 'கூ...கூ...' என்ற ஒற்றைக்குரல்.

கூட்டை அடைந்த காக்கை அதை இனம் கண்டுகொள்கிறது.

'தன் கூட்டுக் குள்ளே இதென்ன ஊடுருவல்; தான் பொரித்த குஞ்சுதானே; தான் ஊட்டி வளர்த்த ஜீவன்தானே!'

பளிச்சென்று நினைவு தட்டியது.

'தான் இட்ட முட்டையாக இருக்காது. யாரோ ஒருத்தி திருட் டுத் தனமாக தன் கூட்டிலே இட் டிருக்கிருள். சோம்பேறி...ஓட் டுண்ணி... அடுத்தவர் உழைப்பை உருஞ்சுகிற சுரண் டல்காரி.

காக்கைக்கு மூக்கு சிவந்தது. கோபம் கொப்பளிக்கிறது.

'இத்தனைக் காலமும் என் உழைப்பை உறிஞ்சியா வாழ்ந் திருக்கிறது? எனக்கும் என் குஞ்சி

# யாழ் நகரில் இனப் படுகொலை

இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலையில் 3000க்கு மேற்பட்ட தமிழ்பேசும் மக்கள் இறந்துள்ளதாக எமக்கு செய்திகள் வந்துள்ளன. இதில் 24-7-83 - 8-5-83க்கு இடையில் நடைபெற்ற கொலைகள் சம்பந்தமான புள்ளி விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஏற்கனவே கடந்த மாத ஈழ முழக்கத்தில் திருகோணமலையில் நடைபெற்ற சம்பவங்கள் சம்பந்தமான விபரங்கள் தந்திருந்தோம். அதன் பின்னர் அங்கு நடந்த கொலைகள் சம்மந்தமான புள்ளி விபரங்களும், ஏனைய தமிழ் பிரதேசங்களில் நடந்த கொலைகள், கொள்ளைகள், தீவைப்புகள் சம்பந்தமான புள்ளி விபரங்களும் அடுத்த ஈழ முழக்கத்தில் தரப்படும். சிங்களப் பிரதேசங்களிலும், மலையகத்திலுமே ஆயிரக்கணக்கான மக்கள் கொலை செய்யப்பட்டாலும் அங்கு புள்ளி விபரங்கள் சேகரிப்பது மிகவும் கடினமாக உள்ளது.

## திின்னவேலி கந்தர்மடம் சம்பவங்கள்

24-7-83 மாலை 4-00 - 6-00 மணிக்குமிடையில் நிகழ்ந்தவை. ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் 5 டிரக் வண்டிகளில் வந்து ஒவ்வொரு ஒழுங்கைகளினுள்ளும் 2 பேராகச் சென்று அங்கு வீடுகளுக்குள் நின்ற ஆண்கள் 10 பேரைச் சுட்டுக்கொன்றுள்ளனர். சில வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

1 சி. சரவணமுத்து, வயது 82, திின்னவேலி, ஓய்வுபெற்ற ஆசிரியர் (வீட்டுக்குள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்)

2 கல பரமேஸ்வரன், வயது39, திின்னவேலி- குடும்பத்

---

களுக்கும் சேரவேண்டிய பங்கை எங்கிருந்தோ வந்த இந்த ஒட்டுண்ணி பங்குப்போட்டிருக்கிறது. ஒரு வர்க்கம்உழைக்க இன்னொரு வர்க்கம் சும்மா இருந்து சுரண்டுவதா?'

மனம் குமுற அந்தக் குஞ்சைப் பார்த்தது. 'தான் பொரித்து வளர்த்த குஞ்சு; ஊட்டி வளர்த்த பறவை.'

ஒரு கணம் வளர்த்த பாசம் தடுத்தது.

அடுத்த கணம் எரிச்சலும் ஆத்திரமும் முட்டியது.

''தான் பொரித்து, அணைத்து பாசத்தோடு வளர்த்தஇந்த குஞ்சி தன் குணத்தைக் காட்டி விட்டதே. தன் வர்க்க குணத்தைக் காட்டி விட்டதே'' என்று சிந்திக்கத் தொடங்கியது.

அடுத்த முடிவு—

''இனி வளர்த்த பாசம்-பந்தம் உறவு என்றெல்லாம் பார்க்க முடியாது. சோம்பேறியாக-ஒட்டுண்ணியாக - சுரண்டுகிறவர்களாக இருப்பவர்களுக்கு இரக்கம் காட்டகூடாது. இனம் காட்டிக்கொடுக்க வேண்டும். தயவு தாட்சயண்மில்லாமல் ஒதுக்கிவிட வேண்டும்''

முடிவைத் தொடர்ந்து அதைத் துரத்தத் தொடங்கியது. அந்தக் கூட்டை விட்டு பறந்துஓடும்வரை விடவில்லை. கொத்தியே விரட்டி விட்டது. ●

திட்டஅலுவலர்(வீட்டுக்குள்-சரவணமுத்துவின்மருமகன்)

3 சத்தியதேவன், வயது-17, தின்னவேலி- ப. நோ. கூ. சங்க விற்பனையாளர்

4 பரராசசிங்கம், வயது-35, தின்னவேலி- காணி அபி விருத்தி அலுவலர் (இவருடைய லொறிச் சாரதி திரு. பிரேமதாச (சிங்கள இனத்தவர்) சுடப்பட்டு படுகாயமுற்ருர்)

5 சி. சிவநாதன், வயது 40, தின்னவேலி, ரதி வாட்ச் கடை முகாமையாளர்

6 த. துரைச்சாமி, வயது 48, தின்னவேலி, லொறிச்சாரதி

7 சிவலிங்கம், வயது-37, கந்தர்மடம், பொறியியலாளர் (டுபாய்)

8 கிருஷ்ணனந்தன், வயது32, கந்தர் மடம், நல்லூர் முருகன் ஸ்டோர்ஸ் உரிமையாளர்

9 ரா. நாகராசா, வயது 23, அம்மன்வீதி, கூலித்தொழில்

10 சீ. கபேந்திரன், வயது 19, பருத்தித்துறை வீதி, நொதேன் டயர்க் கடை வேலையாளர்

11 இச்சம்பவங்களைக் கேள்விப்பட்டு இருதய நோயாளர் ஒருவரும் அதிர்ச்சியால் காலமானார்.

## ஈழத்தில் நடந்த படுகொலைச் சம்பவம்

மானிப்பாய் மத்திய சந்தையடி (24-7-83) ஞாயிறு காலை 7-30 மணியளவில், சிவில் உடைதரித்த ஆயுதம் தாங்கிய சுமார் 15 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று கீரிமலையில் தனியார் மினிபஸ் ஒன்றைக் கடத்தி (சாரதி சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிந்தோம்) மானிப்பாய் யாழ்ப்பாணம் வழியாக வந்தனர்

காரை நகரில் இருந்து 782 இலக்க பஸ்ஸில் வந்தவர்களை பஸ்ஸில் இருந்து இறக்கி ஆண்களை ஒருபுறமும் பெண்களை ஒருபுறமும் வரிசையாக நிற்குமாறு பணித்தனர். பின்னர் ஆண்களைச் சுட்டுக் கொன்றனர். பெண்கள் ஓடிவிட்டார்கள்.

### கொலையுண்டவர்கள்

1 எம். இராஜகாந்தன் - மாணவன்-(மா.இ.க.) சண்டினிப்பாய்

2 சுந்தரவதனன் - மாணவன் (மா. இ. க.) சித்தங்கேணி

3 குமரசிறி - மாணவன் (மா. இ. க.) காரை நகர்

4 நடேஸ்வரன் - மாணவன் (மா. இ. க.) காரை நகர்

5 நரேந்திரன் - மாணவன் - (தொழில் நுட்பக் கல்லூரி) சங்கானை

6 சிவஞானம் - வங்கியாளர் - (மக்கள் வங்கி யாழ்ப்பாணம்) சுழிபுரம்

7 சீவரட்டினம் - சோதனையாளர் (இ. போ.ச. யாழ்ப்பாணம் ஜஃப்னா) சுழிபுரம்

இவர்களின் உடல்கள் இ. பி. எல். எப். இன் முயற்சியால் வீடுகளுக்கு அனுப்பப்பட்டது.

### காயப்பட்டவர்கள்

கே. கனகலிங்கம் - சுழிபுரம் பல்கலைக்கழக மாணவன் (இவர்கள் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர்.

### சண்டிலிப்பாய்- பண்டத்தரிப்பு வீதியில் கொலையுண்டவர்கள்

1 கணக்காளர் - எம். சின்னத்தம்பி - 24 வயது

2 தச்சுத் தொழிலாளி - டி. கோதண்டபாணி -வயது 40

3 பட்டதாரி, பத்திரிகை ஆசிரியர் - எ. விமலதாஸ் - 29

4 அடையாளம் காணப்படாத 30 வயது மதிக்கத்தக்கவர்

08.08.83 திங்கட்கிழமை யாழ் மணிக் கூட்டுக் கோபுரத்திற்கருகாமையில் வைத்து இரு வாலிபர்களை டிரக்கிலும், ஜீப்பிலும் வந்த இராணுவத்தினர் பலவந்தமாக தமது வாகனத்தில் ஏற்றி அவர்களது கண்களை கட்டியபடி அழைத்துச் சென்றனர். பின் நாவற்குழிச் சந்தில் வைத்து பஸ்ஸிற்காக நின்ற நால்வரையும் ஏற்றிக்கொண்டு சென்றனர். செல்லும் வழியில் வாகனத்திற்குள் வைத்து சில படங்களை காட்டி ஆறு வாலிபர்களையும் பலமாக தாக்கிய ராணுவத்தினர் யக்கச்சி என்னும் இடத்திற் கண்மையில் இவர்களை இறக்கி ஓடும்படி கூறிவிட்டு இவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தனர். இச்சம்பவத்தின்போது நால்வர் கொல்லப்பட்டனர். ஓடித் தப்பிய இருவர் காட்டிற்குள் ஒளிந்திருந்து மறுதினம் காலை வந்தனர். இச்சம்பவத்தின்போது தப்பிய ஒருவராலேயே இச்செய்தி அறிவிக்கப்பட்டது. பல்வேறு இடங்களை சேர்ந்த அறுவர் ஏற்றப்பட்டமையால் அவர்கள்பற்றிய விபரங்களை தப்பியவரால் கூற முடியவில்லை.

26.07.83 அன்று ஸ்ரீ லங்கா இராணுவத்தினரால் பலாலியில் வைத்து சுடப்பட்ட மூவர் பற்றிய விபரம். [மாலை4 மணி]

1 சபாபதி - வயது 50

2 சின்னத்தம்பி - வயது 30

3 நிக்கலாய் பிள்ளை வயது 20

25.07.83 அன்று பரந்தன் சந்தியில் ஐவர் சுடப்பட்டனர். இச்சம்பவத்தின்போது நால்வர் ஸ்தலத்திலும் ஒருவர் வைத்தியசாலையிலும் இறந்தனர். இவர்கள் பற்றிய விபரங்கள் இதுவரை பெறமுடியவில்லை.

25.07.83 அன்று யாழ் சிறையில் வைத்து சிறைக் கைதிகள் நால்வரும் பொதுமக்கள் இருவரும் ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் பற்றிய விபரங்கள் அறியமுடியவில்லை.

05.08.83 அன்று மந்திகையில் வைத்து மூன்று இளைஞர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். பெயர் விபரங்கள் அறியமுடியவில்லை.

---

● புரட்சிகரமான கட்சியின்றி, புரட்சி என்பது சாத்தியமற்றது.

லெனின்

Appropriate Technology Services
21, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No

# உறுதி குலையாத ஈழ மக்கள்

வீடு புகுந்து கொலைவெறியாடி,
வீதி எங்கும் பிணங்களை குவித்து
சிறைச்சாலையை சவச்சாலையாக்கிய
இனவெறி அரசின் இரத்தக் கடனை,
ஒரு நாள் தீர்ப்போம்.

எங்கள் உயிரைக் குடித்து
உடமையைப் பறித்து
அகதிகளாக்கி கப்பலேற்றிய
இனவெறி அரசின் இறுதிக்கிரிகையை
நடத்தி முடிப்போம்

சதை வெறியில் பெண்களை விழுங்கிய
வதை முகாம்களில் வன்முறை நடத்திய
கதை எங்கள் வரலாற்றில் ஏராளம்.
இதை எங்கள் விடுதலைப் பயிரின்
உரமாய் ஆக்கி உயரச் செல்வோம்.

தீர்க்கமான மக்கள் சக்தியை
ஆயுத பாணிகள் ஆக்கித் தீருவோம்
ஈழ விடுதலைப் போரை நாங்கள்
இறுதிவரையும் நடத்திச் செல்வோம்

ஈழ விடுதலை! ஈழ விடுதலை!
இதுவே தாகம் உரக்கச் சொல்வோம்

[இக்கவிதை ஆவணி 1983ல் ஈழ மக்கள் தங்கள் பாச பூமியாம் ஈழதேச தெருக்களில் நவ பாசிச அரசின் கொலைப் பட்டாளங்களால் சுட்டுக் கொல்லப்பட்டு, வீசப்பட்டதை எதிர்த்து ஈழ மக்கள் விடுதலை முன்னணி வெளியீடுகளில் வந்த கவிதை]

---

- துப்பாக்கிமீது கட்சி ஆதிக்கம் செலுத்தவேண்டும்.
  துப்பாக்கி கட்சிமீது ஆதிக்கம் செலுத்தக் கூடாது.

மா.ஓ.

குறுநாவல்

# இரவல் தாய்நாடு

--செ. யோகநாதன்

(முன் இதழ் தொடர்ச்சி)

இரண்டாவது முறையும் பொலிசாருக்கு அருள் எனது முகவரியைக் கூறினன்.

இன்னெரு நாட்டோடு யுத்தத்திற்குத் தயாராகும் நிலையில்—இராணுவ முகாமிலே டிரக்குகள், கவசமோட்டார்கள், ஜீப்புகள், இராணுவ சிப்பாய்கள், வாசலிலே துப்பாக்கிகளோடு விறைத்துப் போய் நின்றனர். எங்களைக் கண்டதும் நெஞ்சுக்கு நேராகத் துவக்கு முனைகள் நீண்டன. அடுத்த காலடி வைத்தால் சூடு விழும் எச்சரிப்பு.

நின்ருேம்.

ஜெயகுமார் சிங்களத்தில் சொன்ஞர்.

பதிலையும் மொழி பெயர்த்தார்: ''ஒருவர் மட்டுமே உள்ளே போகலாம் இரத்த உரித்தாளி அதாவது நெருங்கின சொந்தகக்ாரர் மட்டும்...''

யார் பேசுவது?

''இவர்களோடு போய் நான் என்ன பாஷையிலே பேசிக்கொள்வது? நீங்கள் யாராவது போய்க் கதைத்துக் கொண்டு வாருங்கள்'' என்றது கேசுவின் முகம்.

''நான் போகிறேன்...?''

வைராக்கியம் தொனிக்கின்ற முகத்தோடு அருள் முன்வந்தான். ஜெயகுமார் திருப்தியோடு தலையசைத்தான். ''ஆனலும் இவர்களோடுவெகு நிதானமாகக் கதைக்கவேண்டும். அவர்ஙள் ஆத்திரப்படுத்தினலும் எக்காரணம் கொண்டும் நீர் ஆத்திரப்படக் கூடாது. முக்கியமான விஷயம் செல்வராசாவை வெளியே கொண்டு வருவதுதான். நீர் யாரென்று கேட்டால் செல்வராசாவின் ஒன்றுவிட்ட சகோதரன் என்று சொல்லவேண்டும்... அனேகமாக இராணுவ உயரதிகாரி இங்கிலீஷ் தெரிந்தவரகாவே இருப்பார்...''

நாங்கள் மூவரும் அருளை உள்ளேயனுப்பி விட்டு வீதியோரமாக மகோகனி மரத்தின் கீழேயுள்ள தேநீர்க்கடை யொன்றினுள் சென்று உட்கார்ந்துகொண்டோம். சூரியனின் மந்தார வெயில் இலேசான தலையிடியினை உண்டாக்கிக் கொண்டிருந்தது. எல்லாவற்றையும் விட மனம் எல்லையில்லாத அழுந்துதல்களால் சோர்ந்து பொருமிய வாறு இருந்தது. ஒன்றுமே பேசிக்கொள்ளாமல் முக்கால் மணித் தியாலம் ஆமைவேகத்தில் கழிந்த வேளையில், வெளியே அருள் வந்துகொண்டிருந்தான். எங்கள் மனம் ஆவலில் பரபரத்தது.

"ஒன்றும் பிரயோசனமில்லை. செல்வராசா இங்கேயும் இல்லையாம். இங்கேயெல்லாம் கேட்டு ஒரு பிரயோசனமும் இல்லை போலிருக்கிறது. நான் இன்றைக்கு கொழும்பிற்குப் போய் ஒரு முடிவு கண்டு வரவேணும்... ஒரு டிக்டேட்டர்ஷிப் கவர்மெண்டிலைகூட இப்பிடி நடவாது..."

அருளின் குரலில் அழுத்தமான முடிவு தொனித்தது.

நான் அருளைத் தடுக்க முயன்றேன்.

"இப்போதைய சூழ்நிலையில் கொழும்புப் பயணம் புத்திசாலித் தனமானதில்லை. இங்கேயே முயற்சி செய்வதுதான் பிரயோசன மாயிருக்கும்..."

அருள் என்னைப் பார்த்தான் அர்த்தபுஷ்டியோடு.

"இல்லை, நான் போயே ஆக வேணும்..."

பாடசாலை முடிந்து திரும்பி வந்த சிவாவின் முகம் வாடிக் களைத்திருந்ததை அவதானித்தேன். அந்தக் கிழமை முழுவதும் பரபரப்பாகவே கழிந்து, அவளின் நாளாந்தப் பேச்சுக்களே ஆத்திரத் தோடு, முகந்தெரியாததோர் எதிரியை ஆக்ரோஷமாக விமர்சித்துச் சாடுவதுபோல அமைந்திருந்தன. நாளாந்தம் போலீஸ் கெடுபிடி களும், இராணுவத்தினரின் திடீர் பரிசோதனைப் பாய்ச்சல்களும் எல் லோரையும் மனம் சலிக்கவைத்து, அன்றாட வாழ்வின் ஒழுங்கு களையே குலைத்து அவர்களின் கண்களிலும், செய்கைகளிலும் அச்சத்தையே தெளித்திருந்தன. நேற்று மாலைப்புகையிரதத்தில் அருள் கொழும்பிற்கு சென்றது ஒரு புறத்திலே எங்களைக் கவலை யில் ஆழ்த்தியிருந்தது. நான் அருளிற்காக ஒதுக்கப்பட்ட முன் அறை யினுள்ளே சென்று சன்னல்களைத் திறந்துவிட்டேன். மெல்லிய காற்று, அறையினுள்ளே குளுகுளுவென்று நுழைந்தது, ஒரு சுட்டிப் பையனைப் போல, ட்விக் ட்விக் என அணில்கள் பாடியவாறு அங்கு

மிங்கும் சுறுசுறுப்பாகத் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. வாழை யிலைகள் ஒன்றையொன்று தொட்டுத் தடவியும் கண்களை நிறைத்தன.

நான் மேசையின் முன்புறமாக வந்து அமர்ந்துகொண்டேன். எதிரே அழகிய மணிக்கூடொன்றை மாட்டியிருந்தான். ஒவ்வொரு மணியாகிறபோதும், மணிக் கூட்டின் தலைப்பகுதியிலுள்ள வீட்டு வடிவத்துள்ளிருந்து வெளியே எட்டிப் பார்த்து நேரம் ஒலிக்கிற குருவி யோடு அமைந்த அலங்கார மணிக்கூடு எட்டிப்பார்த்து இப்போது மணி சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டது மேசையின் ஓரம் டைப்ரைட்டர். முக்கால்வாசி அடித்த கட்டுரை மெஷினிலேயே கிடந்தது. அதன் அருகேயுள்ள ஃபைலினுள் ஏற்கனவே அவன் அடித்த இரண்டு பக்கங்கள். ‘வாஷிங்டன் போஸ்ட்’டுக்கும் ‘மில் வாக்கி நியூஸ்’ பத்திரிகைகளுக்கும் இலங்கையின் நிலைபற்றி அப் பட்டமாகச் சொல்கிற கட்டுரை. பின் தங்கிய பிரதேசங்களில் விவசாய அபிவிருத்தி, மண் ஆய்வு, உரமிடல் பிரச்னைகள் பற்றி இவன் எழுதிய ஆங்கில நூல்கள். போன்டம் பி. எஸ். தொகுத்த அமெரிக்கன் நீக்ரோ பொயட்ரி, அன் அன்தோலஜி எபௌட் மைனோரிட்டிஸ் இன் அமெரிக்கா — வி டு பிலாங் எடிட்டெட் பை மேரி டர்னர், பார்பரா நொலன் தொகுத்த வாய்ஸ் ஆப் ஆப்ரிக்கா’ ’சின்னி அச்சிப்பின் சில நூல்கள். லாஸ்டர் ஆர் பார்ன் எழுதி ‘சிட்டி’ தமிழ் மொழிப்பெயர்த்து வாசகர் வட்டம் வெளியிட்ட ‘அறிவின் அறுவடை தமிழ்ப் புத்தகம். மனதிலூறிய ஆச்சரியத்தோடு அந்தப் புத்தகத்தை எடுத்தேன். ‘பசுமைப்புரட்சிக்காய் கனவு காணுகிற அருளிற்கு—லட்சுமி கிருஷ்ண மூர்த்தி—வாசகர் வட்டம்’ எனக் கையொப்பமிட்டிருந்தது. என்னை யறியாமலே எனது மனம் விம்மிற்று. இவனுடைய எண்ணங்கள் எவ்வளவு பேரை வசீகரித்திருக்கின்றன...அத்தகைய பெருமைக்கும் கௌரவத்துக்குமுரிய அருள்...என் நெஞ்சிலேயிருந்துமறுகனமே பெரு மூச்சுச் சீறியது. ‘எல்லா வசதிகளையும் தூக்கியெறிந்து விட்டு தனது தாய் நாட்டிற்கு வந்து தனது அனுபவங்களையும் ஆராய்ச்சி முடிவு களையும் பிரயோகித்து விவசாயத் துறையில் பெருமாற்றங்கள் செய்ய வேண்டுமென்று நிறைந்த ஆசைகளோடு வந்தான் அருள். தான் பிறந்து வளர்ந்த மண்ணில் நடந்து திரிவதே பெரும் பேறெ னக் கருதிய அவன், இந்த அறையினுள்ளே ஒரு முழுநாள் தன்னும் தங்க முடியாதவனாக...’’

வெளியே காலடிச் சத்தம் கேட்டது நான் எழுந்துவெளியே போனேன். சோர்ந்த முகத்தோடு ஜெயகுமாரும், முருகேசுவும.

‘‘எவ்வளவு முயற்சிகள் செய்தும் செல்வராசாவைப் பற்றி ஒரு தகவலும் அறியமுடியவில்லை. பாராளுமன்ற உறுப்பினரைச்சந்தித்து

விஷயத்தைக் கூறியபோது அவரும் மிக்க பரபரப்புக்கொண்டு தொடர்புகளைக் கையாண்டும் ஒரு பதிலையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்களுக்கும் உதாசீனமான பதில்களே வருகின்றன. எம்.பி. மாரே இப்போது தமது உயிரையும் உடமைகளையும் பாதுகாத்துக்கொள்ள முடியாத சூழ்நிலைக்குள்ளாகி இருக்கிறார்கள். இந்த நிலைமையில் என்ன செய்யலாம்?''

மனதினை மொய்த்திருக்கிற பிரச்னைகளின் தாக்கம், ஜெயகுமாரின் சொற்களில் தொனித்தது.

''பிறந்த மண்ணிலேயே பாதுகாப்பில்லாத நிலை. அந்நிய மண்ணிலே ஒதுங்கிக்கொண்டு வாழ்க்கை நடத்துகிற மாதிரி நிலைமை வந்துவிட்டது. எந்நேரம், என்ன நடக்குமோ என்று தெரியாமலிருக்கிறது...''

தனது 'டை'யைக் கழுத்திலிருந்து முடிச்சைத் தளர்த்திக் கழற்றி உதறிமடித்துக் கொண்டார் ஜெயகுமார். ஐம்பது வயதான, தலை முழுவதும் வெள்ளை வெளேரென நரைத்துப்போன, தனது மனசாட்சிக்கு சரியென்று படுகிற வழக்குகளை மட்டுமே ஏற்று, அதனால் இதுவரை திருமணமாகாமலும், வாடகை அறையிலும் வாழ்ந்து வருகிற ஜெயகுமாரை நான் புதிதாகப் பார்ப்பதுபோலப் பார்த்தேன். ஒரு சதங்கூட வாங்காமல், எல்லா வேலைகளையும் ஒதுக்கிவைத்துவிட்டு நியாயமொன்றுக்காக எங்களோடு அலைகிற இந்த மனிதருக்கு எப்படி நன்றி சொல்லலாம்? சிவா உள்ளேயிருந்து தேநீர் கொண்டு வந்தாள்.

''மத்தியானம் நீங்கள் இருவருமே சாப்பிட்டிருக்க மாட்டீர்கள்... சாப்பாடிருக்குது. உடம்பை கழுவிவிட்டு வந்து சாப்பிடுங்கோ...''

முருகேசு அவளை நிமிர்ந்து பார்த்தப் பார்வையில் நிறைந்த வாத்ஸல்யம். ஜெயகுமார் வாயினுல் உஸ்ஸிட்டுக் களைப்பாறியபின் தேநீர்க் கோப்பையினை எடுத்து உறிஞ்சினுர்: எங்குமே பதட்டமாகத் தான் இருக்குது...''

சிவா நாற்காலியில் உட்கார்ந்தாள்.

''எங்களினுடைய பள்ளிக்கூடத்திலை இன்றைக்கும் பெரிய சலசலப்பு. அட்டூழியங்களெல்லாம் அளவுக்கு மேலாகிக்கொண்டே வருகுது...''

நான் சிவாவைப் பார்த்தேன். —தொடரும்

---

குறிப்பு : பக்கம் 10-ல் உள்ள பெட்டிச் செய்தியில் இரண்டாவது வரியில் தொழிலாளித்துவத்தின் என்பதை முதலாளித்துவத்தின் என்றும், பக்கம் 13-ல் உள்ள பெட்டிச் செய்தியில் முதல் வரியில் வர்த்திற்காக என்பதை வசந்தத்திற்காக என்றும் திருத்திப் படிக்கவும்.

# ஈழப் போராளிகள் கோரக் கொலை

உலகத்திலேயே இல்லாத மாதிரி புதுமையான செயல்களை செய்வதில் சிறீலங்கா அரசு மிகவும் பெயர் பெற்றது. அதனடிப் படையில் நடைபெற்றது தான் காட்டுமிராண்டித்தனத்திலும் விடக் கேவலமான, வெலிக்கடைச் சிறைக் கொலைகள். ஜயத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவர்களில், 95 சதவிகித மானோர் மீது எந்தவித வழக்கும் தாக்கல் செய்யமுடியாத நிலையில், இவர்களை சிறீலங்கா அரசு திட்டமிட்டு கொலை செய்துள்ளது. கிட்லரின் ஜெர்மனியிலோ அன்றி இனத் துவேச தென்னாப்பிரிக்காவிலோ கூட இப்படியான கொடுமைகள் நடைபெற்றிருக்க முடியாது.

ஆனால் சிறீலங்கா அரசு இது விடயத்தில் உலகத்துக்கே முன் மாதிரியாக நடந்துகொண்டுள்ளது. இந்தக் கேவலமான செயலை விவரிப்பதற்கு எந்த மொழியிலுமே வார்த்தை கிடையாது. சிறைச் சாலையில் கைதிகளை வைத்திருப்பது அவர்களது பாதுகாப்புக் கருதியே. ஆனால் சிறீலங்காவைப் பொறுத்தவரை சிறைச்சாலையிலும் பாதுகாப்புக் கிடையாது. திட்டமிட்டு அரசு இக்கொலைகளைச் செய்தது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அது மாத்திரமல்ல, அரசின் திட்டத்திற்கேற்ப இராணுவமும், குண்டர்களுமே இக் கொலைகளைச் செய்துள்ளார்கள். சக சிங்களக் கைதிகள் சிறையை உடைத்து இவர்களைக் கொலைசெய்தார்கள் என்பதெல்லாம் அரசு வெளியுலகுக்கு அவிழ்த்துவிட்ட பம்மாத்துக் கதைகள். இலங்கையிலேயே மிகவும் பாதுகாப்பான சிறைச் சாலையை உடைக்க எந்த சக கைதியாலும் முடியாது. அது மாத்திரமல்ல, சிறைச்சாலையில் எந்த ஒரு கதவும் உடைக்கப்படவில்லை. அதை இன்னும்சென்று பார்க்கலாம். சிறைச்சாலை கதவுகள் யாவும் திறக்கப்பட்டு கைதிகளுக்கு கைவிலங்கிட்டு ஒவ்வொருவராக சித்திரவதைசெய்து கொன்றுள்ளார்கள். இவர்களால் 54 பேரைத்தான் அங்கு கொலை செய்ய முடிந்தது. ஆனுல் அங்கு உயிரிழந்த ஒவ்வொருவரும் தமது மரணத்தின் மூலம் ஆயிரமாயிரம் போராளிகளை உருவாக்கியுள்ளார்கள் என்பதை சிறீலங்கா அரசு விரைவில் புரிந்துகொள்ளும். அங்கு செத்து மடிந்த போராளிகளைப் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவை தவிர ஈழமக்கள் விடுதலை முன்னணியைச் சார்ந்த தோழர்கள் பேரின்பராஜா, தேவானந்தன் போன்ருேரும் வேறு பல தோழர்களும் வெட்டுக் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஸ்ரீலங்காவின் வெலிக்கடைச் சிறையில் 25-07-83 திங்கட் கிழமை கொலை செய்யப்பட்ட முப்பத்தி ஐந்து விடுதலைப் போராளிகளின் பெயர்கள்.

1 அருமைநாயகம் என்றும் சின்னராஜா என்றும் அழைக்கப்படும் செல்லத்துரை ஜெயரட்னம்.
2 அன்ரன் என்று அழைக்கப்படும்சிவநாயகம் அன்பழகன்
3 ராசன் என்று அழைக்கப்படும் அரியபுத்திரன் பால சுப்பிரமணியம்
4 சுரேஸ் மாஸ்டர் என்றழைக்கப்படும் காசிப்பிள்ளை சுரேஷ்குமார்

5 சின்னத்துரை அருந்தவ ராசா

6 தேவன் என்றும் அரபாத் என்றும் அழைக்கப்படும் தனபாலசிங்கம் தேவகுமார்

7 மயில்வாகனம் சின்னையா

8 கணபதிப்பிள்ளை மயில் வாகனம்

9 சித்திரவேல் சிவானந்த ராஜா

10 தம்பு கந்தையா

11 சின்னப்பு உதயசீலன்

12 கணேஷ் என்றும் கணேஸ் வரன் என்றும் அழைக்கப் படும் கதிரவேற்பிள்ளை ஈஸ்வரநாதன்

13 கிருஷ்ணபிள்ளை நாகராஜா

14 கணேஷ் என்று அழைக்கப் படும் கணபதி கணேசலிங் கம்

15 அம்பலம் சுதாகரன்

16 இராமலிங்கம் பாலச்சந்திரன்

17 பசுபதி மகேந்திரன்

18 கண்ணன் என்றழைக்கப் படும் காசிநாதன் தில்லை நாதன்

19 குலம் என்றழைக்கப்படும் செல்லப்பா குலராஜசேகரம்

20 மோகன் என்றழைக்கப்படும் குமாரசாமி உதயகுமார்

21 ராஜன் என்றழைக்கப்படும் சுப்ரமணியம் சிவகுமார்

22 ராஜன் கோதண்டபிள்ளை தவராஜசிங்கம்

23 ''கொழும்பான்''என்றழைக் கப்படும் கருப்பையா கிருஷ் ணகுமார்

24 யோகன் என்றழைக்கப்படும் ராஜயோகநாதன்

25 அந்தோனிப் பிள்ளை உதய குமார்

26 ''அமுதன்'' என்றும் ''அவுடா'' என்றும் அழைக் கப்படும் ஞானசேகரன் அமிர்தலிங்கம்

27 அழகராசா ராஜன்

28 வேலுப்பிள்ளை சந்திரகுமார்

29 சாந்தன் என்றழைக்கப்படும் சிற்றம்பலம் சாந்தகுமார்

30 பாலசந்திரன் என்றும் சோமு என்றும் ஜெகன் என்றும் அழைக்கப்படும் கணேஷ் ஆனந்தன் ஜெகநாதன்

31 குட்டிமணி என்று அழைக் கப்படும் யோகசந்திரன்

32 வைத்திலிங்கம் நடேசதாசன்

33 தங்கத்துரை என்றழைக்கப் படும் நடராசா தங்கவேல்

34 சிவபாதம் மாஸ்டர் என்ற ழைக்கப்படும் நவரத்தினம் சிவபாதம்

35 செல்லத்துரை சுப்ரமணியம்

ஸ்ரீலங்காவின் வெலிக்கடை சிறையில் இரண்டாவது தடவை யாக நிகழ்ந்த படுகொலையின் போது கொலை செய்யப்பட்ட ஈழ விடுதலைப் போராளிகளின் விபரம்:

குறிப்பு: உடன் 17 பேரும் ஆஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருவரும் இறந்தனர்.

1 முத்துகுமார் சிறீகுமார்

2 அமிர்தநாயகம் பிலிப். குமார குலசிங்கம்

3 செல்லச்சாமி குமார்

4 கந்தசாமி சர்வேஸ்வரன்

5 அரியாம்பிள்ளை மரியாம் பிள்ளை

6 சிவபாலன் நீதிராஜா

7 தேவநாயகம் பாஸ்கரன்

8 பொன்னையா துரைராசா

9 ஞானமுத்து நவரட்ணச் சிங்கம்

10 கந்தையா ராஜேந்திரம்

11 டாக்டர் ராஜசுந்தரம்

12 சோமசுந்தரம் மனோரஞ்சன்

13 ஆறுமுகம் சேயோன்

14 தாமோதிரம் பிள்ளை ஜெய முகுந்தன்

15 சின்னத்தம்பி சிவசுப்பிர மணியம்

16 செல்லப்பா ராஜரட்ணம்

17 குமாரசாமி கணேசலிங்கம்

18 பொ. தேவகுமார்

—

## முதலாளித்துவ கொள்கை

ஒரு மனிதன் வேறு எந்தத் தகுதியும் அற்றவனுயிருந்தும், கேவலம் தனது முதலின் பலத தினுல் பொருள்களை உற்பத்தி செய்யும் விலையுயர்ந்த சாதனங் களைப் பெற்று, பகுதியைத் தனது சொந்த லாபத்திற்காகவும் தனக்கு உதவி செய்யும் முதலை பெருக்குவதற்காகவும் உபயோ கித்துப் பணம் சம்பாதிப்பதற்குச் சிறந்த வழி முதலாளிக்கொள்கை.

---

## காலனி மக்கள் விடுதலே

சோசலிசத்தின் வெற்றிகளு டன் தொடர்புடையது காலனி மக்களினங்களின் விடுதலை. உலக காலனி பேரரசுகளின் இடி பாடுகளில், 1945-ற்கும் 1975-ற் கும் இடைப்பட்ட காலகட்டத்தில் 80க்கு மேற்பட்ட இளம் தேசிய அரசுகள் தோன்றியுள்ளன. இது மாபெரும் அக்டோபர் புரட்சி வெற்றி பெற்றபின்பு நடந்த மிகப் பெரும் வரலாற்று சம்பவம் ஆகும்

---

முன் அட்டை தொடர்ச்சி......

மீள முடியாது'' என்ற மனோநிலைக்கு அவர்களை கொண்டுவரு வதாக அமைந்திருந்தது. இந்த பாதுகாப்பற்ற மனோநிலையை- தொடர்ந்து நடத்தப்படும் தனிநபர்வாத பயங்கர நடவடிக்கைகள் அதிகரிக்கச் செய்யுமே ஒழிய, மாற்றாது என்பதை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் நன்கு உணர்ந்தனர்.

ஈழ விடுதலைக்கு ஆதரவு கொடுக்கும் மக்களை பிரிவினை தடைச் சட்டத்தைக் கொண்டு வந்து செயவர்த்தனா அரசு தண்டிக்க திட்ட மிட்டது. வெலிக்கடைச் சிறை சம்பவம் மக்களை அகநிலையில் 'பாதுகாப்பற்றவர்கள்' என்று உணர வைத்தது.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் மக்களின் விடுதலைக்கான உணர்வுகளை தளரச் செய்திருக்க-ஒரு மாற்று அரசியல் நடவடிக்கை அவர்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டியதை அவசியமாக்கியது.

1. புரட்சியாளர்கள், விடுதலைக்கு ஆதரவு தருபவர்கள் சிறை கொள்ளப் பட்டால் அவர்களை 'சிறை மீட்க' எங்களால் முடியும் என்று மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டவேண்டும்.

2. ஆயிரம் சிறைப்படுகொலைகள் செய்தாலும் ஈழ விடுதலை புரட்சியாளர்கள் ஒரு போதும் பணிய மாட்டார்கள் என்பதை ஆளும் சிங்கள தேசிய வெறிபிடித்த பூர்ஷ்வா அரசுக்கு உணர்த்துவது- என்ற இரண்டு அரசியல் கடமைகளை நிறை வேற்றுவதே இத்தாக்குதலின் அரசியல் நோக்கமாகும்.

'இச்சிறையுடைப்பு' சம்பவத்தின் போது கொரில்லாக்கள், சிறை காவலர்களுக்கோ இதரர்களுக்கோ எவ்வித பாதிப்புமின்றி திட்ட மிட்ட நடவடிக்கையூடாக புரட்சிக்காரர்களை மீட்டுச் சென்றனர் இவர்களுடன் சேர்த்து பல்வேறு காரணங்களுக்காக சிறை வைக்கப் பட்டிருந்த பலரும் தப்பித்தனர். தற்போது அவர்களில் பலரை அரசு மீண்டும் கைது செய்துள்ளது, சிலர் சரணடைந்துள்ளனர், எனினும் இதுவரை புரட்சியாளர்கள் ஒருவரும் எதிரியின் கண்களில் சிக்க வில்லை. இது ''புரட்சியாளர்களை சிறையிலிருந்து மீட்கவும் எங்களால் முடியும்; பாதுகாக்கவும் முடியும்'' என்பதை போராடும் மக்களுக்கு உணர்த்துவதாக உள்ளது.

மட்டுநகர் மாதிரியான மிகவும் சிறிய குறுகலான நகரத்திலிருக்கும் மிகவும் பாதுகாப்பான சிறையில் இருந்து இப்போராளிகளை மீட்டு மிகவும் பாதுகாப்பாகக் கொண்டு செல்வ தென்பது இலகுவான விசய மல்ல. மக்களின் பூரண ஒத்துழைப்பு இல்லாமல் இப் போராளிகளை பாதுகாப்ப தென்பது மிகவும் கடினமான செயலே. இந் நிலையில் பார்க்கும் பொழுது மட்டுநகர் மக்கள் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பால் வைத்துள்ள நம்பிக்கையையும், அதேபோல் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது வெகுஜன அணிகள் மூலம் எவ்வளவு தூரம் மக்கள் மத்தியில் வேரூன்றியுள்ளது என்ப தையும் அறியக் கூடியதாய் உள்ளது.

இந்த நிகழ்ச்சி ஈழ மக்களுக்கு புதிய நம்பிக்கையையும், புதிய உத்வேகத்தையும் அளித்துள்ளது. இதர புரட்சிகர போராளி களுக்கு ''ராணுவ நடவடிக்கை என்பது, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கே தவிர, பயங்கர சூழ்நிலையை ஏற்படுத்துவதற் கல்ல என்பதை உணர்த்துவதாக உள்ளது.

- வாழ்க ஈழமக்கள் புரட்சிகர முன்னணி!
- வாழ்க மக்கள் விடுதலைப் படை!
- வெல்க ஈழ மக்கள் விடுதலைப் போராட்டம்!

# நிலைக்கண்ணாடி

**செய்தி:**

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளாக செயற்படும் சிறிலங்கா நவ பாசிச அரசு 3000-த்திற்கும் அதிகமான அப்பாவி பொதுமக்களை கொலை செய்தும், பல கோடிக் கணக்கான சொத்துக்களை கொள்ளையடித்தும், லட்சக் கணக்கான மக்களை அகதிகளாக்கியதை ஐ. நா. சபைக்கு எடுத்துச் செல்லாத அமெரிக்க அரசு 269 பயணிகளுடன் ரஷ்ய எல்லை மீது பறந்த கொரிய விமானத்தை ரஷ்யா சுட்டு வீழ்த்தியதற்காக, ஐ. நா. சபையில், கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆதரிக்கும்படி அமெரிக்கா தனிப்பட்ட முறையில் தீவிர வேண்டுகோள் விடுத்தது.

- வேண்டாத மனைவியின் கால் பட்டால் குற்றம் கைபட்டால் குற்றம்.

**செய்தி:**

சிறிலங்காவின் உள்நாட்டு விவகாரத்தில் வெளிநாட்டுக்காரர்கள் தலையிடக் கூடாது. ஒதுங்கியே இருக்கவேண்டும். நட்புறவு உதவியை நாங்கள் வரவேற்கிறோம், கவலை தெரிவிப்பதையும் கண்டிக்கவில்லை. ஆனால் எங்களது குழம்பில் கை வைக்கவேண்டாம், பல சமையல் காரர்கள் சேர்ந்து செய்தால் குழம்பு கெட்டுவிடும்.

- நீங்கள் வைக்கும் குழம்பில் சிகப்பாயிருப்பது எம் ஈழமக்களின் குருதியினால் தானே. அதில் காய், கறிகளுக்கு பதிலாக மிதப்பது எம் ஈழ மக்களின் உடல்கள்தானே.

**செய்தி:**

சிறிலங்காவின் உள்நாட்டு விவகாரத்தில் எந்த வெளிநாட்டு வற்புறுத்தலையும் ஏற்க முடியாது என்று சிறிலங்கா வர்த்தக கப்பல் துறை மந்திரி, லலித் அப்துல் முதலி, அறிக்கை வெளியிட்டுள்ளார்.

- ஈழத்தில், அயல்நாடான சிறிலங்கா தனது இராணுவத்தை குவித்திருப்பது ஈழத்தின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டதாக ஆகாதோ?

**செய்தி:**

தமிழர் தலைவர் அமிர்தலிங்கம் லண்டன் நகரில் அளித்த பேட்டியில் ''தனி தமிழ் நாட்டுக்கான போராட்டம் காந்திஜியின் அகிம்சைக் கோட்பாட்டின் அடிப்படையில் அமையும்'' என்றார்: இந்தியாவில் அளித்த பேட்டியில் ''இன்னொரு தடவை இனவெறியாட்டம் ஆரம்பிக்கும் என்றால் இந்திய அரசின் கடமை இராணுவத்தை அனுப்பி தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்றும் கூறியுள்ளார்.

# ஈழச்செய்தி

ஃ கலவரம் தொடங்கி மூன்று நாட்கள் கலவரத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக துப்பாக்கிசூடு நடத்தவோ சட்டம், ஒழுங்கை நிலை நாட்டவோ இராணுவம் மறுத்துவிட்டது. 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாக, வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இராணுவம் மறுத்து விட்டது என்றும், ஈழம் பிரிவதனை அனுமதிக்க முடியாது எனவும் இலங்கை வெளியுறவு மந்திரி ஐக்கிய நாடுகள் சபையில் பேசியுள்ளார்

இலங்கையில் தடை செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் 4பேர்விடுதலை செய்யப்பட்டனர் தமிழர்களுக்கு எதிராக கலவரத்தைத் தூண்டி விட்டதாக குற்றம் சாட்டி கம்யூனிஸ்ட் கட்சிகளையும் மற்றும் 2 இடதுசாரி கட்சிகளையும் அரசு தடை செய்தது.

ஃ மட்டக்களப்பில் கல்குடா தொகுதியில், 1300 சிங்கள குடும்பங்கள் திட்டமிட்ட முறையில் குடியேற்றப் பட்டுள்ள பௌத்த பிக்குகளின் முயற்சியினாலேயே இது நடை

---

● இந்திய இராணுவம் அங்கு சென்று உண்ணவிரதம், சத்தியாகிரகம் போன்ற போராட்டங்களில் மட்டும்தான் ஈடுபட வேண்டும். ஆயுதம் ஏந்தி போராடக் கூடாது என்று கூறினலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**செய்தி:**

இலங்கையில் வவுனியாவில் தமிழ் இளைஞர் இருவர் இலங்கை விமானப்படை வீரர்களால் 11ம் தேதி அன்று சுட்டுக் கொல்லப்பட்டனர்.

● ‘‘மழைவிட்டும் தூவானம் விடவில்லை.’’

**செய்தி:**

‘‘இலங்கை அரசினர் தமிழர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த இன்னமும் அவகாசம் உள்ளது. எனினும் இலங்கை அரசு தற்போதைய வாய்ப்பைப் பயன்படுத்தவில்லை என்ருல் நிலவரம் கட்டுமீறிப் போய்விடும்’’ என்று அமிர்தலிங்கம் லண்டன் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

‘‘ஜெயவர்த்தனேயுடன் பேச்சு வார்த்தை நடத்த விரும்பவில்லை. சுயமரியாதையுடனும், பாதுகாப்புடனும் வாழக்கூடிய நிலைமையை இந்தியா ஏற்படுத்த வேண்டும்’’ என்று என். வி. நவரத்தினம் இந்திய பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

● முன்னவர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர். பின்னவர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் உப தலைவர்.

பெற்றுள்ளது. அரச வாகனங்களின் உதவியுடன் அத்தியாவசியப்பொருட்கள் விநியோகிக்கப் படுகின்றன. ஆயுதங்கள் மற்றும்தமிழ் அகதிகளுக்கு வெளி நாட்டில் இருந்து வழங்கப்பட்ட கூடாரங்கள், நிவாரணப் பொருட்கள் இவர்களுக்கே வழங்கப்பட்டிருக்கின்றன.

ஃ கலவரம் கட்டுக்குள் அடங்கி விட்டதாக அரசு அறிவித்திருந்த போதும் ஈழப் பிரதேசத்தில் இராணுவஅட்டூழியங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளது. வவுனியாவில் இருவரும் மட்டகளப்பில் மூவரும் இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர். பலர் தாக்குதலுக்குள்ளாவதும் அநாவசியமாக கைது செய்யப்படுவதும் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

ஃ யாழ் நகரில் எதுவித முன்னறிவித்தலும் இன்றி தொடர் ஹர்த்தால்கள், பாடசாலை பகிஸ்கரிப்பு, பஸ் எரிப்பு நடவடிக்கைகள்போன்றவை அவசியம் அற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டது. இச்சம்பவங்களுக்கும் ஈழமக்கள் விடுதலை முன்னணிக்கும் தொடர்பு இல்லை என ஈழ மக்கள் விடுதலை முன்னணியினர் துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளனர். விடுதலை இயக்கங்கள் வெகுஜன போராட்டங்களை முன்னெடுக்கும்போது சரியான முறையில் முன்னறிவித்தல் கொடுக்கவேண்டும் எனவும் ஈழ மாணவர்கள் படிப்பை நிராகரிக்கும் முட்டாள்தனமான முடிவை நிராகரித்து இன்றைய கால கட்டத்தில் முதலாளித்துவ கல்வியை விமர்சன பூர்வமாக கற்க வேண்டும் எனவும் அத்துண்டு பிரசுரத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஃ யூலை 83-ல் ஈழமக்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் 'நான் சிங்கள மக்களின் தேசிய உணர்வை மதிக்கிறேன்' என்றும், ஈழ மக்களின் நலன்களைப்பற்றிதான் அக்கறை கொள்ளப்போவதில்லை என்றும் வானொலியிலும், தொலைகாட்சியிலும் ஆணவமாக உரையாற்றிய ஜே. ஆர். இன்று யு. என். பி. கட்சி சிங்களவருக்கும் தமிழருக்கும் உரிய கட்சி எனவும், கட்சிக்குள் உள்ள யாராவது இனவெறி நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களாயின் தன்னை கட்சியில் இருந்து நீக்கி அவர்கள் கட்சியை பொறுப்பேற்கட்டும் என்றும் கூறியுள்ளார். கொடூரங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் அதைத் தூண்டி விட்டுக்கொண்டிருந்த ஜே. ஆர். இன்று இவ்வாறு பேசுவதற்கு காரணம் உலக நாடுகளில் சிறிலங்கா அரசுக்கு ஏற்பட்ட அவமரியாதையை போக்குவதற்காகவும் பொருளாதார உதவிகளைப் பெறுவதற்குமேயாகும். 81-ம் ஆண்டு கலவரங்களுக்குப் பின்னும் இதேபோன்ற கண்துடைப்பு வேலைகளில் ஈடுபட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஃ ஃ ஃ

# மட்டக்களப்புச் சிறையில் இருந்து மீட்கப்பட்டோர் விவரம்

23ம் திகதி இரவு 8 மணிக்கு மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் மீட்கப்பட்டோரின் விபரம்.

| | |
|---|---|
| விரிவுரையாளர் வரதராஜபெருமாள் | 30-3-83 |
| விரிவுரையாளர் மகேஸ்வரராஜா | 30-3-83 |
| எஸ். பேரின்பராஜா | 30-3-83 |
| எஸ். சிவலிங்கம் | 30-3-83 |
| எஸ். சிறிஸ்கந்த ராஜா | 30-3-83 |
| எஸ். பிரேமானந்தன் | 30-3-83 |
| எஸ். கோணேஸ்வரன் | 30-3-83 |
| வி. சுந்தரலிங்கம் | 30-3-83 |
| ஜி. பத்மநாபன் | 30-3-83 |
| ரி. விஜயகுமார் | 30-3-83 |
| வி. சண்முகநாதசிவம் | 30-3-83 |
| கே. தேவானந்தன் | 2-3-81 |
| ரி. தட்சிணாமூர்த்தி | 25-5-80 |
| வி. மகேந்திரன் | 25-5-80 |
| பி. பவானந்தன் | 25-5-80 |
| எஸ். யோகராஜா | 25-5-81 |
| ரி. மகேஸ்வரன் | 19-6-81 |
| வி. சிவசுப்ரமணியன் | 19-6-81 |
| மாணிக்கம் ராஜன் | 13-10-81 |
| சண்முகம் சந்திரபாலன் | 23-10-81 |
| எஸ். கணேசலிங்கம் | 19-11-81 |
| எஸ். சிறீதரன் | 30-11-81 |
| ஞானசேகரம் | 23-4-82 |
| அந்தோணிப்பிள்ளை அழகிரி | 17-5-82 |
| அகஸ்டின் போல் | 13-11-82 |
| வனபிதா சின்னராஜா | 14-11-82 |
| எஸ். ஜெயபிரகாஷ் | 19-11-82 |
| எஸ். ராஜாஜி | 19-11-82 |
| ரி. நித்தியானந்தன் | 20-1·1-82 |
| வணபிதா. ஜெய சுந்தரராஜா | 21-11-82 |
| டாக்டர் ஜெயகுலராஜா | 21-11-82 |
| அருளானந்தம் டேவிட் | 10-4-82 |
| ராமநாதன் | 1-6-83 |
| தங்க மகேந்திரன் | — |
| ஜெயக்கொடி | — |
| வாமதேவன் | — |
| ஞானவேல் | — |
| பரமதேவா | — |
| ரி. மரியநாயகம் | 20-11-81 |
| எஸ். நகுலேஸ்வரன் | 16-1-83 |
| எஸ். மகேஸ்வரன் | 17-1-8-3 |
| ரி. ஜெகதீசன் | 1-4-83 |

...ropriate Tecnology Services
21, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# உங்கள் கவனத்திற்கு

மாணவத் தோழர்களே, நண்பர்களே, ஈழ முழக்கத்திற்கான கவிதை, கட்டுரை மற்றும் துணுக்குகள் தங்களிடம் இருந்து எதிர் பார்க்கப் படுகின்றன. உங்களது படைப்புகள், முற்போக்கானவை யாகவும் புதியதோர் சமுதாயத்தை படைக்க உற்சாக மூட்டுபவை யாகவும் இருப்பது விரும்பத்தக்கது. அத்துடன் "ஈழ முழக்கம்" பற்றிய ஆரோக்கியமான விமர்சனங்களும் தங்களிடம் இருந்து எதிர் பார்க்கப்படுகின்றது. இது எமது சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உற் சாகத்தைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். உங்களது ஆக்கங்கள் விமர்சனங்களை

ஈழ மாணவர் பொது மன்றம்
த. பெ. எண். 4967, சென்னை-17

என்ற முகவரிக்கு அனுப்பவும்.

---

# ஈழ முழக்கம் சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு சந்தா | 15 00 |
| ஆறு மாத சந்தா | 7 00 |
| தனிப்பிரதி | 1 00 |

சந்தா தொகைக்குத் தகுந்த போஸ்டல் ஆர்டர் எடுத்து கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**எம். லூகியதாசன்**
தபால் பெட்டி எண். 4967
சென்னை—600 017

---

ஈழ மாணவர் பொதுமன்றத்திற்காக எம். எல். தாஸ் அவர்களால் வெளியிடப்பட்டது. தொடர்பு முகவரி: Post Box No. 4967, Madras - 17 அச்சிட்டது: விசாலம் பிரிண்டிங் ஹவுஸ், சென்னை-24.

PRIVATE CIRCULATION ONLY

யார் நீங்கள்
எம்மை சிறைப்படுத்த?
யார் நீங்கள்
எங்கள் விழிபறிக்க?
யார் நீங்கள்
எங்கள் உயிர் குடிக்க?

யார் நீங்கள்
என தெளிந்தோம்
மானுடத்தின் எதிரிகளே!
சிறை மீட்டோம் தோழர்களே
இப்போ
யார் நாங்கள் எனப் புரிவீர்!

—ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

PRINTED MATTER

பெயர் ____________________

விலாசம் ____________________

____________________

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. ______

G. U. E. S.
Post Box No. 4967
T. Nagar,
MADRAS-600 017.